செய்தி இதழாகப் பதிவு பெற்றது.

சிந்தாமணி

ரூ 2/50

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

CHINTAMANI இல. 717 1983 செப்டம்பர் 4 ஞாயிற்றுக்கிழமை ★ ★

சிந்தாமணி

கொள்ளைப் பொருள்கள் வைத்திருப்போருக்கும் மரண தண்டனை

அவசரகால சட்டத்தின் கீழ் கடின விதிகள் பிரகடனம்

அரச வர்த்தமானியில் பிரசுரம்

கொழும்பு, செப்டம்பர் 4

சமீபத்தில் நடந்த வன்செயல் கலவரங்களில் சூறையாடப்பட்ட கொள்ளைப் பொருள்களை நேர்மையின்றி வாங்குவோர், பதுக்கி வைத்திருப்போர் ஆகியோருக்கும் மரணதண்டனை அல்லது ஆயுள் கால சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

ஏற்கனவே இருந்து வந்த அவசரகால விதிகளுடன் இந்த மேலதிக விதியை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிரகடனம் செய்திருக்கிறார்.

கொழும்பிலும் மற்றும் [illegible] களிலும் சமீபத்திய வன்செயல்களின் போது கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்களில் கணிசமானவற்றை பொலீஸார் மீட்டிருக்கின்றனர்.

இன்னும் பெருமளவு கொள்ளைப் பொருள்கள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்றும், கொள்ளையடித்தவர்கள் அவற்றை வேறு ஆட்களிடம் கொடுத்து மறைத்து வைத்திருக்கிறார்கள் என்றும் [illegible]

அதைத் தொடர்ந்தே, வன்செயலில் கொள்ளையடித்த பொருள்களை நேர்மையின்றி பெறுவது, பதுக்கி வைத்திருப்பது ஆகியனவும் மரண தண்டனைக்கு அல்லது ஆயுள்கால சிறைத் தண்டனைக்கு உரிய குற்றமாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே அமுலில் இருந்து வரும் சில அவசரகால விதிகள் வருமாறு—

★ [illegible] சேதம் விளைவிப்பது, கொள்ளை அடித்தல், கொலை, கொலை முயற்சி ஆகிய குற்றங்களுக்கு மரண தண்டனை அல்லது ஆயுட்கால சிறைத் தண்டனை.

★ அரசாங்கத்துக்கு எதிராக மக்களை தூண்டி விடுவது, இனங்களுக்கு இடையே பகைமையைத் தூண்டுவது ஆகிய குற்றங்களுக்கு ஆகக்

(2 ஆம் பக்கம் பார்க்க)

பாக்கிர் தலைமையில் ஜனாதிபதிக்கு ஆலோசனைச் சபை

கொழும்பு, செப். 4

இலாகா இல்லாத அமைச்சர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார் தலைமையில், ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் சபை ஒன்று விரைவில் அமைக்கப்படும் என்று நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

வர்த்தகம், கைத்தொழில் உட்பட நாட்டின் முக்கிய விவகாரங்களில் ஜனாதிபதிக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்குவதற்காக இந்தச் சபை அமைக்கப்பட இருக்கிறது.

மற்றும் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் சபையில் அங்கத்துவம் பெறுவார்கள், என்றும் தெரிய வருகிறது. (க-ப)

கைகளைப் பிசைந்து நின்று காரிகை யாரை நோக்கிக்
கண்விழிப் பார்வையாலே காமுறப் பாணம் எய்தாள்?,
பொய்யிடை உடைய இந்தப் பொற்கொடி வீச்சினிலே
மெய்துடித் திடாத வீரர் மேதினி உளரோ, அம்மா!]

மாலாவின் பூதவுடலுக்கு அமைச்சர்கள் அஞ்சலி

மட்டக்களப்பு, செப். 3

மட்டக்களப்பில் வியாழன் இரவு துப்பாக்கிச் சூடுபட்டு மரணமான மட்டக்களப்பு மாநகர சபை ஐ. தே. க. உறுப்பினர் திரு. மாலா இராமச்சந்திரனின் பூதவுடலுக்கு அமைச்சர்கள் திரு. பெஸ்டஸ் பெரேரா, திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், திரு. செ. இராசதுரை ஆகியோர் இன்று அஞ்சலி செலுத்தினர்.

மட்டக்களப்புமாநகர முதல்வர் திரு. இரா. அம்பலவாணரும் அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

பூதவுடல் இன்று மாலை கல்லியங்காடு மைதானத்தில் தகனம் செய்யப்பட்டது. (க-ப-42)

மட்டுநகரில் மற்றும் ஒருவர் ராஜினாமா

மட்டக்களப்பு, செப். 3

மட்டக்களப்பு மாநகர சபையிலிருந்து ஐ. தே. கட்சி உறுப்பினர் திரு. எப். ஆர். ராகல் இன்று பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தார்.

இவர் பறங்கியர் சமூகத்தைச் சேர்ந்தவர். 1971 இல் உதவி மேயராகப் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநகர சபையில் ஐ. தே. க. உறுப்பினர் குழுத் தலைவர் திரு. ஈஸ்வரன் வெள்ளிக்கிழமை பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தார் என்பது தெரிந்ததே. (க-ப-42)

மட்டுநகர் அகதிகள் முகாம் இடமாற்றம்

வவுணதீவு, செப். 3

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியிலுள்ள அகதிகள் முகாம் மூடப்பட்டு, மாமாங்க பிள்ளையார் ஆலய மடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளது.

இம்முகாமில் கதிர்காமம், பதுளை, பண்டாரவளை போன்ற இடங்களை சேர்ந்த சுமார் 450 பேர் தங்கியுள்ளனர். (க—318)

நாளை விரிவுரை

வவுணதீவு, செப். 4

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அகதிகள் முகாம் அமைக்கப்பட்டிருப்பதால், கல்லூரியின் மூன்றாம் தவணைக்கான விரிவுரைகள் நாளை 5-ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

ஏனைய ஆசிரிய கலாசாலைகள் 29ஆம் திகதி திறக்கப்பட்டு விரிவுரைகள் வழமை போல் ஆரம்பமாகி விட்டன. (க—318)

போலி டாக்டர்கள் ஏராளம்!

கொழும்பு, செப். 4

நோயாளர்களுக்குச் சிகிச்சையளிக்கக் கூடிய தகுதியும், ஆதாரமும் இல்லாத 40,000 "போலி டாக்டர்கள்" நாடு முழுவதிலும் தொழில் புரிகின்றனராம்!

இதுபற்றி சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

போலி டாக்டர்களைப் பற்றி விசாரணை செய்து, அவர்களைக் கைது செய்து, அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதற்குச் சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சுயாதீன டாக்டர்கள் சங்கம், பிரஸ்தாப போலி டாக்டர்களைப் பற்றிய அபிப்பிராயங்களை சுகாதார அமைச்சுக்குச் சமர்ப்பித்திருப்பதாகத் தெரிகிறது. (க—7)

பாதுகாப்பும், இருப்பிடமும் தந்தால் கடமைக்கு வரலாம்

பிரட்மனிடம் தமிழ் ஊழியர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 3

தகுந்த பாதுகாப்புக்கும் இருப்பிட வசதிக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பின்னரே, கடமைக்குத் திரும்ப முடியும் என்று தமிழ் அரசாங்க ஊழியர்கள் தெரிவித்தனர்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோன் இன்று யாழ்ப்பாணம் வந்திருந்த போது, மேற்கண்டவாறு அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

திரு. பிரட்மன் வீரக்கோனுடன், பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், திரு. விஸ்பிரட் ஜயசூரிய, திரு. ராஜா ராஜசிங்க ஆகியோர் வந்திருந்தனர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும் திரு. பிரட்மன் வீரக்கோனுடன் சகல இடங்களுக்கும் சென்றார்.

இடம் பெயர்ந்து வந்துள்ள அரசாங்க ஊழியர்களை, வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து, திரு. வீரக்கோன் சந்தித்தார்.

பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்கள் சார்பில் பல கோரிக்கைகள் அவரிடம் கையளிக்கப்பட்டன.

இவற்றைப் பரிசீலித்து ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதாக அவர், தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வாக்குறுதி அளித்தார்.

இதற்கு முன்னர், பாதிக்கப்பட்ட ஆசிரியர்களையும் திரு. வீரக்கோன் சந்தித்து உரையாடினார். இச் சந்திப்பு சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம் பெற்றது.

பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கு நிவாரணம் வழங்குவதில், திரு. பிரட்மன் வீரக்கோன் கையாண்ட துரித நடவடிக்கைகளுக்காக, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. மகாசிவம், அவருக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

அரசாங்க ஆசிரியர்களைப் போன்று, தனியார் பாடசாலைகள், தோட்டப் பாடசாலைகள் ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள் பிரச்சினைகளும் கவனிக்கப்பட வேண்டும் என்றும் —

பொகவந்தலாவையில் கைது செய்யப்பட்டு, பின்னர் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மூன்று ஆசிரியர்களையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

ஆசிரியர்களின் இதர கோரிக்கைகளையும் தாம் கவனிப்பதாக திரு. வீரக்கோன் உறுதி அளித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அகதிகள் முகாம்களையும் திரு. வீரக்கோன், அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டார். (க-120)

பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் பற்றி ஆராய மாநாடு

அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களினால் பாதிப்புக்குள்ளான முஸ்லிம்கள் சம்பந்தமாக எவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பது என்பது பற்றி ஆராயப்படும். இதற்கான ஆலோசனை மாநாடு ஒன்றை நடத்த கொழும்பு ஜனனா நலன்புரி சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை மேற்படி சங்கத்தின் அலுவலகத்தில் இம்மாநாடு நடைபெறும்.

ஜனனா நலன்புரிச் சங்கத் தலைவர் அல்ஹாஜ் அஷ்ரப் ஹூசைன் தலைமையில் நடைபெறும் மேற்படி மாநாட்டில், முஸ்லிம் பிரமுகர்கள் பலர் கலந்து கொள்வர்.

ஏற்கனவே 300 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் தமது பாதிப்புகள் பற்றிய விபரங்களை இச் சங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை, வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கு இரண்டு வீடுகளை கட்டிக் கொடுப்பதற்கு இச் சங்கம் முடிவு செய்திருக்கிறது. (க-180)

புதிய வார்ட்டு

கொழும்பு, செப். 4

அம்பலங்கொடை பொல்வத்தை அரசாங்க மாவட்ட ஆஸ்பத்திரியில் 12 படுக்கைகளைக் கொண்ட புதிய வார்டு ஒன்று, நாளை 5ஆம் திகதி மாலையில் திறந்து வைக்கப்படும்.

சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து இந்த வார்டைத் திறந்து வைப்பார்.

தனிநாடு கோரிக்கையை கூட்டணி கைவிடக்கூடும்

புதுடில்லியில் இந்த அபிப்பிராயம்

புதுடில்லி, செப். 3

சமஷ்டி அமைப்பு முறையிலான அரசு ஒன்றை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் சம்மதித்தால், தமிழர் விடுதலைக் கூட்டணி தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிடும் என உறுதியளித்திருக்கிறது.

இந்தியப் பிரதமரின் விசேஷத் தூதுவர் திரு. ஜி. பார்த்தசாரதியிடம் இவ்வாறு உறுதி அளிக்கப்பட்டிருப்பதாக "ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகை, செய்தியை மேற்கோள் காட்டி "[illegible]" செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

தமிழ்ப் பிரதேசத்துக்குக் கணிசமான அளவு சுயாட்சி வழங்கப்படவும் வேண்டும்

(2 ஆம் பக்கம் பார்க்க)

இன்று கூட்டணி கூட்டம்

கொழும்பு, செப். 4

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் குழு உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர்கள், மாநகர சபைத் தலைவர்கள் ஆகியோர் தற்போதைய நிலை குறித்து ஆராய்வதற்காக —

இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் கூடவுள்ளனர். (க—ப)

ஆசிரியர் இடமாற்றங்கள் ஜனவரிவரை இடைநிறுத்தம்

கொழும்பு, செப். 4

ஆசிரியர் இடமாற்றங்கள் ஜனவரி மாதம் வரை இடை நிறுத்தி வைக்கப்படும்.

கல்விச் சேவைகள் ஆணைக்குழு இவ்வாறு தீர்மானித்திருக்கிறது.

இவ்வாண்டுக்குரிய ஆசிரியர் இடமாற்றங்களை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாமென, கல்வி இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா, கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள், ஆசிரியர் இடமாற்றங்கள் செய்யப்பட மாட்டா.

அண்மையில் ஏற்பட்ட இனக் கலவரங்கள் காரணமாக, ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். அதனும் பல பாடசாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவே ஆசிரியர் இடமாற்றங்கள் இடை நிறுத்தப்படுவதற்குக் காரணமெனத் தெரிகிறது.

கல்விச் சேவைகள் ஆணைக்குழு மூலம் இவ்வாண்டில் சுமார் 7,000 ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது. (க-7)

மிகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

சிந்தாமணி
சிறுவிளம்பரங்கள்

மணமகள் தேவை

இலங்கை சோனகக் குடும்பத்தைச் சேர்ந்த கல்வியறிவும் மார்க்கப் பற்றும் நல்லொழுக்கமுடைய சொந்தத் தொழில் செய்யும் 27 வயதுடைய மகனுக்கு தனது தாயார் முஸ்லிம் மணமகளைத் தேடுகிறார். மணமகள் 22 வயதுக்கு உட்பட்டவராயும் அழகும் மார்க்கப் பற்றும் நல்லொழுக்கமுள்ளவராயும் இருத்தல் வேண்டும். சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. சொந்த வீடு எதிர்பார்க்கப்படும். கொழும்பில் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 83942, மே/பா, சிந்தாமணி விளம்பர பீடம், த.பெ. 1257 கொழும்பு-12.

ஹோட்டல் வேலை

பெரிய முஸ்லிம் ஹோட்டலுக்கு கீழ்கண்ட வேலைகளுக்கு ஆள் தேவை. வெயிட்டர் 4, கொதும்பை ரொட்டி மேக்கர் 2, பில் மேக்கர் 2, கேஷியர் 2, புரியாணி பெண்டன் 2, பெரிய கோக்கிக்கு கை ஆள் 4, போய் பொடியன் 4, இரேட்ஸ் வியாபாரம் அனுபவமுள்ளவர் 2 உடன் நேரில் வரவும். 65, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு - 11, கோட்டை ரெயில்வே ஸ்டேசன் முன் —

வி. இ. 123571

தேவை

கொழும்பு 13ல், 4 முதல் 7 பர்ச் கட்டப்பட்ட வீட்டுடனோ அல்லது வீடு கட்டக்கூடிய நிலமோ வாங்குவதற்கு தேவை. தொடர்பு கொள்ளவும். வஹிப், 15, குமார வீதி, கொழும்பு - 11, தொலைபேசி 33065.

வி. இ. 123597

கனரகப் பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர்கள், உதவியாளர்கள், மும்மொழிகளிலும் கருமம் ஆற்றக் கூடிய லிகிதர்கள் தேவை. அறிமுக அட்டை மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். சிட்டி ஹார்ட்வெயார், 56-சி, மெயின் வீதி, மொறட்டுவை.

வி. இ. 123596

கட்டழகு

பெண்கள் கட்டழகுடன் திகழ, தனது உயரத்திற்கும் பருமனுக்கும் ஏற்ற மார்பகங்கள் அல்லாத மெலிந்து நலிந்து போன பெண்களுக்கு அழகான பருமனை மார்பகங்களையும் தோற்றத்தையும் பெற விரும்பினால், சுயவிலாசமிடப்பட்ட முத்திரை கவருடன் தொடர்பு கொள்க. முகவரி: லீலாவதி அத்தநாயக்க, 55, மிருந்து மாவத்தை, கொழும்பு-12.

வி. இ.123557

ஆடவர்களுக்கு!

ஆடவர்களே! உங்கள் அந்தரங்கமான உறுப்பில் ஏதாவது குறைபாடுகள் இருப்பின் நிவர்த்தி செய்து கொள்ள விபரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரைக் கவருடன் தொடர்பு கொள்க. முகவரி:— பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர், (ராஜ தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிருந்து மாவத்தை, கொழும்பு-12. வி. இ.123557

யந்திரம் மந்திரம்

யாருக்கும் சொல்ல முடியாத சொல்லிலும் பலன் கிடைக்காத மனக்கஷ்டங்களா, காதலர்களுடைய பாசம் மாறாமல் இருக்க வேண்டுமா; கணவன் மனைவி பிரிவில் உள்ள சச்சரவு வெறுப்பு சந்தேகம் தீர வேண்டுமா, குடும்பத்தில் அன்பும் சமாதானமும் நிலைக்க வேண்டுமா. தேவையானவர்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமா, இவை யாவற்றிற்கும் நிவாரணமளிக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டா. விபரங்களுக்கு சுயவிலாசமிடப்பட்ட முத்திரை கவருடன் தொடர்பு கொள்க முகவரி: பி. எம். திசாநாயக்கா, அரசாங்க பதிவு பெற்ற குப்த விஞ்ஞான மாந்திரீக நிபுணர் (ராஜ தேவாலய பிரதம தர்மகர்த்தா) 55, மிருந்து மாவத்தை, கொழும்பு - 12. தொலைபேசி- 33965.

வி. இ.123557

மணமகள் தேவை

கொழும்பில் அரசாங்க நிறுவனம் ஒன்றில் எழுதுவினைஞராக கடமையாற்றும் சோனக குடும்பத்தைச் சேர்ந்த, கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது இளைஞருக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். முதல் கடிதத்திலேயே முழுவிபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்:- ம 83941, மே/பா சிந்தாமணி விளம்பர பீடம், த. பெ. இல. 1257, கொழும்பு-12.

தையல் நிலையம்

செப்டம்பர் 11 ஆம் திகதி முதல், கொழும்பு ரெக்லமேஷன் வீதி, பெல். பெங் கட்டடத்தில் வல்வாஸியின் புதிய தையல் நிலையம் (டெயிலரிங் ஷொப்) திறந்து வைக்கப்படும். வெள்ளவத்தையில் மேற்கொள்ளப்பட்ட அதே சேவை. மறவாதீர்கள் வல்வாஸிஸ்.

வி. இ: 166173

உடன் தேவை

பல வருடம் அனுபவமுள்ள மெஷின் மைண்டர்ஸ், கொம்பசிட்டர்ஸ் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) உடன் தேவை. விண்ணப்பிக்கவும் அல்லது ஆதாரங்களுடன் நேரில் வரவும். பாத்திமா (மின்) அச்சகம், அக்கரைப்பற்று.

வி. இ. 044884

நிதி தேவை

மாணிக்க வியாபாரி ஒருவருக்கு கூடுதல் வட்டி விகிதத்தில் ஒரு லட்சம் ரூபா தேவை. ஜோசப், 63A நாணயக்கார மாவத்த, ஒபய சேகரபுர, ராஜகிரிய

வி. இ. 044487

நியூமரலாஜி

நியூமரலாஜி அபிமானிகளின் பேராதரவுடன் எமது சேவையைத் தொடர்கிறோம். தத்தமது பிறந்த திகதிக்கேற்ப பெயரையும், வாழ்க்கையின் இன்னோரன்ன பல அம்சங்களையும் அதிர்ஷ்டமாக்கிக் கொண்டு - மகிழ்ச்சிகரமாக வாழ விரும்புவோர் எமக்கு எழுதலாம்.

Sulfika Buhary, 86, Horana Road, Eluwila — Panadura.

வி. இ. 044447

ஜோதிட கணிப்பு

* பிறந்த - குதக் குறிப்பு - 25/– * பிறந்த ஜாதகக் குறிப்பு - 55/– (புத்தக வடிவில்) * திருமணப் பொருத்தம் - 30/– * தற்போதைய பலன் அறிய - 15/– * என் ஞானக் குறிப்பீடு - 55/– (நடந்த 4 - நடப்பது 5 வருடம்) இலவச கடிதத் தொடர்போ - வி. பி. பி. ஆடரோ கவனிக்கப்படமாட்டாது. மணியோடருடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சோதிட தத்துவஞானி P. K. சாமி 33, இனச்சந்தை - நுவரெலியா.

வி. இ. 166169

மலையாள மாந்திரீகம்

ஆரம்பக் கல்வி முதல் பட்டப்படிப்பு மாணவர்களின் ஞாபக சக்தி - திறமை சித்தி போன்ற அனைத்தும் கைகூட கல்வி ஞானக் கலசம், மற்றும் ஆண், பெண், வசியம், வியாபார விருத்தி யந்திரம் இவைகளுக்கு 130/- மட்டுமே. இலவசத் தொடர்புகளில்லை மணியோடருடன் தொடர்பு கொள்க. நேரிலெனில் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் வருக. சோதிட தத்துவஞானி பி. கே. சாமி, 33, இனச்சந்தை - நுவரெலியா.

வி. இ. 166167

பெண்களுக்கு

பெண்களின் மாதவிடாய் எல்லாவித தாமதமான நிலை உடன் நிவாரணம் பெறுவதற்கும், பாதுகாப்பான சிகிச்சை பெறுவதற்கும் சந்தியுங்கள் பூரண சுகத்தின் பின் பணம் செலுத்தலாம். சிகிச்சை நிலையம் இரவு பகல் திறந்திருக்கும். இராஜ் கிளினிக் மாதர் சுடலை.

வி. இ. 166168

ஞாபகசக்தி

மெம்மோரின் (MEMORIN) மூளை விருத்தி வில்லைகள். மேற்கு ஜெர்மனியில் வைத்திய கலாநிதி ஒராமி அவர்களால் தயாரிக்கப்பட்டவை. அதிசயிக்கும் வகையில் இழந்த ஞாபக சக்தியை மீட்டுத் தரும், ஞாபகசக்தி போஷாக்கும், சிந்திக்கும் ஆற்றல், விருத்தியையும் கொடுக்கிறது. மாணவ மாணவிகள், வயது முதிர்ந்தோர் எழுத்தாளர், வைத்தியர், சங்கீத நிபுணர்களுக்கு இன்றியமையாத ஒரு வரப்பிரசாதம். 50 வில்லைகள் கொண்ட பாக்கெற் ஒன்றுக்கு ரூ. 90/- வி. பி. பியில் பாதி முன் பணத்தோடு பெறலாம். ஏக விநியோகஸ்தர்கள்:—

Brite Enterprises, 123, Olcott Mawatha, Colombo 11.
தொலைபேசி: 24392

வி. இ. 037459

புலிகள், கரடிகள்
போராடினால்
பிரச்சினைக்கு தீர்வு இல்லை

நிதி அமைச்சர் சாடுகிறார்

கொழும்பு, செப். 4

புலிகளும், கரடிகளும் தமிழீழத்துக்காகப் போராடும் வரை பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுவது சாத்தியமில்லை. வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னர் அவர்கள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட வேண்டும்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இப்போதுதான் தூக்கத்தில் இருந்து விழித்து, கூட்டணித் தலைவர்கள் அ. அமிர்தலிங்கத்துடனும், மு. சிவசிதம்பரத்துடனும் வட்டமேசை மாநாடு ஒன்றை நிபந்தனை எதுவுமின்றிக் கூட்ட வேண்டும் என்கிறார். இப்படித்தான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று அவர் ஜனாதிபதிக்குச் சொல்கிறார்.

நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரோனி டி மெல் மேற்கண்டவாறு சொன்னார்.

பொத்துஹெரவில் இலங்கை வங்கிக் கிளை ஒன்றைத் திறந்து வைத்த பின்னர் நடந்த பொதுக் கூட்டத்தில் திரு. ரோனி டி மெல் பேசினார்.

புலிகளும், கரடிகளும், தமிழீழ பிரசாரகர்களும் வன்செயல்களால் ஆயுதப் படையினரைக் கொன்றும் அரசாங்கத்தைப் பயமுறுத்தித் தங்கள் கோரிக்கைகளைப் பெறலாம் என்றும் நினைக்கிறார்கள்.

ஆனால் அரசாங்கத்தைப் பிரிக்கும் எல்லா முயற்சிகளுக்கும் குறுக்காக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான அரசு மலைபோல் நிற்கும்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான நெருக்கடிகள் தோன்றின. இந்நாட்டின் 2500 வருட சரித்திரத்தில் பல சோதனைகள் இடம் பெற்றன. ஆனாலும் இறுதியில் சிங்கள தேசம் வெற்றியையே கண்டது.

வடக்கிலுள்ள 40 சத வீதமான தமிழர்களும் கிழக்கிலுள்ள 70 சத வீதமான தமிழர்களும் பிரிவினைக்கு ஆதரவு வழங்கவில்லை.

வடக்கிலுள்ள தீவிரவாதிகளே வன்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் கலவரங்களில் ஈடுபடாது, மக்கள் அமைதியாக இருக்க வேண்டும். அப்போதுதான் அரசாங்கத்தால் உருப்படியான கருமங்கள் ஆற்ற முடியும்.

இவ்வாறு நிதி அமைச்சர் பேசினார். (க)

கொள்ளைப்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூடியது 20 வருட சிறைத் தண்டனை.

★ சட்டவிரோத நடவடிக்கைகளுக்குத் தூண்டும் சுலோகங்களைப் பேசுவது, எழுதிக் காட்சிக்கு வைப்பது —

வதந்திகளைப் பரப்புவது —

தடை செய்யப்பட்ட இயக்கங்கள், பயங்கரவாத இயக்கத் தொடர்பான விசாரணைகள், பொலிஸாரதும் முப்படைகளதும் நடமாட்டங்கள், நாட்டின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்கள் பற்றிய தகவல்களை அச்சிடுவது, ஆகியனவும் அவசரகால விதிகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களாகும். (சு-ப)

நவீன பஸ் நிலையம்

வெள்ளவாயா, செப். 3

மொனறாகலை தேர்தல் தொகுதியைச் சேர்ந்த வெள்ளவாயா நகரில் நவீன பஸ் நிலையமொன்று அமைக்கப்பட இருக்கிறது.

இதற்காக வெள்ளவாய எம். பி. திரு. ஜே. எம். குமாரதாச ஐந்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கியிருக்கிறார். (எ—39)

வடபகுதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர், யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட முதலாவது ரயில், வெள்ளிக்கிழமை பிற்பகல் கொழும்பு கோட்டையை வந்தடைந்தது. கலவரத்தின் பின் வடபகுதி சென்றவர்கள் இந்த ரயில் மூலம் திரும்பி வந்தனர். அதனையே படத்தில் காண்கிறீர்கள். (சு-ச)

அணுசக்தி மூலம் மின் உற்பத்தி
இலங்கையில் சாத்தியம்

கொழும்பு, செப். 4

பதினைந்து ஆண்டுகளுக்குள், அணுசக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் புதிய முறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும்.

அணுசக்தி உற்பத்திக்குத் தேவையான முக்கிய மூலப் பொருட்களான யுரேனியமும், தோரியமும் இலங்கையில் இருப்பதாக நம்பப்படுகிறது.

இந்த இயற்கை வளத்தை பயன்படுத்தி, நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தை இலாபகரமான முறையில் உற்பத்தி செய்யலாம்.

அத்தோடு, கோடை காலத்தில் ஏற்படக் கூடிய மின்சார தட்டுப்பாட்டையும் இதன் மூலம் தவிர்க்க முடியும்.

இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு போதிய பயிற்சி பெற்றவர்கள் இலங்கையில் இல்லாதிருப்பதால், இத்துறையில் பயிற்சித் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டி இருக்கிறது. இதுவே இப்பொழுதுள்ள பிரச்சினையாகும்.

பிரஸ்தாப புதிய திட்டத்தின் மூலம் மின்சார உற்பத்திக்காக மாத்திரமன்றி, அணுசக்தியை விவசாயம், கைத்தொழில், வைத்தியம், உணவுப் பொருட்களின் பாதுகாப்பு, சுற்றுடல் பாதுகாப்பு ஆகிய துறைகளிலும் பயன்படுத்துவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை அணுசக்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் டாக்டர் ரொனல்ட் தர்மவர்தன மேற்படி தகவலை சிந்தாமணிக்குத் தெரிவித்தார். (சு-11)

வாழைச்சேனையில் முஸ்லிம் அகதிகள்

வாழைச்சேனை, செப். 3

சமீபத்திய கலவரங்களால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களும், அகதிகளாக வாழைச்சேனை முஸ்லிம் கிராமத்துக்கு வந்துள்ளனர்.

வாழைச்சேனை முஸ்லிம் நாலாம் வட்டாரத்தில் பணிமனையைக் கொண்டு இயங்கி வரும் கல்குடா, வை. எம். எம். ஏ. இயக்கத்தினர், திருகோணமலைப் பகுதியிலிருந்து அகதிகளாக வந்துள்ள சில முஸ்லிம் குடும்பத்தினருக்கு, நிதியையும், உடைகளையும் நிவாரணமாக வழங்கினர்.

வை. எம். எம். ஏ. இயக்க பதில் தலைவர் ஜனாப் எம். ஏ. சி. எம். புகாரி, பொருளாளர் - செயலாளர் ஜனாப் எம். ஏ. சி. ஏ. முத்தலிப் ஆசிரியர், வாழைச்சேனை முஸ்லிம் கிராம சேவை உத்தியோகத்தர் ஜனாப் எம். ஐ. அகமது லெப்பை - நிர்வாக சபை உறுப்பினர் ஜனாப் எம். எஸ். கலீலுர்றகுமான் ஆசிரியர் ஆகியோர் அகதிகளுக்கு உதவி வழங்கும் போது சமூகமளித்திருந்தனர். (சு—319)

269 பேருடன் விபத்துக்குள்ளான
விமானத்தை தாக்கியதை ரஷ்யா ஒப்புக் கொண்டது
ஆனால் அது உளவு பார்த்ததாக குற்றச்சாட்டு

மாஸ்கோ, செப். 3

தென் கொரியாவின் போயிங் 747 விமானத்தை ஏவுகணைகளால் தாக்கியதை ரஷ்யா ஒப்புக் கொண்டது.

ஆனால், பிரயாணிகளை ஏற்றிச் சென்ற இந்த விமானம், ரஷ்ய எல்லைக்குள் ஊடுருவி, உளவு பார்த்ததாக அது குற்றஞ்சாட்டி இருக்கிறது.

இந்த தென் கொரிய விமானம் முன்கூட்டி திட்டமிட்டு, ரஷ்ய பாதுகாப்பு எல்லைக்குள் பறந்திருக்கிறது. இதற்கு அமெரிக்கா பின்னணியில் நின்றிருக்கிறது. அதனால் இந்த விபத்துக்கு அமெரிக்காவே பொறுப்பு ஏற்க வேண்டும்.

இவ்வாறு ரஷ்யாவின் உத்தியோகபூர்வ பத்திரிகையான "டாஸ்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

தென் கொரியாவிலிருந்து 269 பிரயாணிகளுடன் புறப்பட்டுச் சென்ற மேற்படி விமானம், ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல் காரணமாக, கடலுக்குள் வீழ்ந்து மூழ்கியது.

ரஷ்யாவின் கம்சாட்கா பிரதேசத்தின் மேலாக இந்த விமானம் இரண்டு மணித்தியாலமாகப் பறந்து சென்றது. அப்பொழுது அதற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதனை உதாசீனம் செய்து விமானம் தொடர்ந்து தெற்கு நோக்கிச் சென்றது.

அவ்வமயம் விமானத்தை நோக்கி ஏவுகணைகள் பிரயோகிக்கப்பட்டன என்றும் "டாஸ்" செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

ரஷ்யாவின் இந்த விளக்கத்தை அமெரிக்கா நிராகரித்து விட்டது.

விபத்துக்குள்ளான தென் கொரிய விமானம், உளவு விமானமாக இல்லாவிட்டால், எதற்காக அமெரிக்கா அதன் பிரயாணத்தை தொடர்ந்து கவனிக்க வேண்டும்?

ரஷ்யாவின் ஆகாய எல்லைக்குள் அந்த விமானம் பிரவேசித்ததை ஏன் தடுக்கவில்லை? என்றும் "டாஸ்" கேள்வி எழுப்பியிருக்கிறது.

விபத்தில் உயிர் இழந்தவர்களுக்காக அப்பத்திரிகை அனுதாபமும் தெரிவித்திருக்கிறது. (க)

பஸ் சாரதிக்கு திடீர் மாரடைப்பு
விபத்தில் 16 பேர் காயம்

திருகோணமலை, செப். 3

இபோச பஸ் ஒன்றைச் செலுத்தி வந்த சாரதிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. அதனால் அந்த பஸ், வீதியில் நெல் மூடைகளுடன் நின்ற லொறி ஒன்றுடன் மோதியது.

இந்த விபத்தில் 16 பிரயாணிகள் காயமுற்றனர்.

பஸ்ஸைச் செலுத்தி வந்த சாரதியான எச். டபிள்யூ. டெனிஸ் சில்வா, பின்னர் பஸ்ஸினுள் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

சாரதிக்கு மாரடைப்பினால் மரணம் ஏற்பட்டது என்று திருமலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் வி. வி. கே. செல்வத்துரை சாட்சியமளித்தார்.

சாரதியின் மரணம் இயற்கையானது என்று திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. உபாலி வேலாத்து தீர்ப்பளித்தார்.

இவ்விபத்துச் சம்பவம் கடந்த வாரம் திருமலையில் இருந்து 20 மைல் தொலைவில் உள்ள முள்ளிப்பொத்தானை என்னுமிடத்தில் இடம்பெற்றது.

இந்த பஸ் கொழும்பில் இருந்து திருமலை நோக்கி பிரயாணிகளுடன் வந்து கொண்டிருந்தது. பஸ் கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபையின் திருமலை டிப்போவிற்கு உரியது.

முள்ளிப்பொத்தானைக்கு அருகில் பஸ் வந்து கொண்டிருந்த சமயம், பஸ்ஸைச் செலுத்திய சாரதி அங்கும் இங்கும் தலையை ஆட்டினார், பின்னர் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து பஸ் அங்கும் இங்குமாக கட்டுப்பாடின்றி ஓடி, வீதியின் ஓரத்தில் நின்று கொண்டிருந்த லொறி ஒன்றின் மீது மோதியதாக மரண விசாரணையில் தெரிய வந்தது.

சாரதியின் உடலில் காயங்கள் எதுவுமே காணப்படவில்லை என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (சு—217)

டெலிவிஷன்

ரூபவாஹினி

6.02	டோய் பொக்ஸ்
6.30	"பியசட்டறன்"
6.50	எக்ஸெறைசிஸ் மேட் ஈஸி
7.00	செய்திகள் — தமிழ்
7.15	நெத் சர
7.45	"ஏச கவச"
8.15	செய்திகள் – சிங்களம்
8.30	கீதவாணி
9.00	வாத்திய விருந்து
9.30	செய்திகள் ஆங்கிலம்

ஐ. டி. என்

6.01	பிளே பொக்ஸ்
6.30	தோஸ்ட் — [illegible]
7.00	செய்திகள் — தமிழ்
7.15	த கிங் கிரோஸ் ஷோ
7.30	டிரீக் அன்ட் டிரீட்
7.45	வெஸ்ட் சைட் மெடிக்கல் ஸ்டோரி
8.15	செய்திகள் சிங்களம்
8.30	வெஸ்ட் சைட் மெடிக்கல் ஸ்டோரி - தொடர்ச்சி
9.00	மிஷன் இம் பொசிபள்
9.30	செய்திகள் - ஆங்கிலம்
9.45	மிஷன் இம்பொசிபள் தொடர்ச்சி

தனி நாடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற அடிப்படையிலேயே, தமிழர் விடுதலைக் கூட்டணி இவ்வாறு உறுதி அளித்திருப்பதாகவும் அப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமரின் விசேஷ தூதுவராக இலங்கைக்கு வந்திருந்த திரு. பார்த்தசாரதி, சென்ற வியாழக்கிழமை நாடு திரும்பினார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளில், எட்டு நாட்களாக ஈடுபட்டிருந்த பின் அவர் நாடு திரும்பி, பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடம் தமது விஜயத்தின் பெறுபேறுகள்பற்றி விளக்கினார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண, அதிக அதிகாரங்களுடன் கூடிய பிரதேச சுயாட்சியும் ஒரு நிபந்தனை என திரு. பார்த்தசாரதி, பிரதமரிடம் எடுத்துக் கூறினார்.

திரு. பார்த்தசாரதி இரு வாரங்களின் பின்னர் மீண்டும் இலங்கை வருவார் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

பிறந்த நாள் வாழ்த்துக்கள்

முஹம்மது ரியாஸ்
றஹுமத்துல்லா

25—8—83ல் தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் மிகவும் சிறப்பாக கொண்டாடினார். இவரை சவூதி அரேபியாவில் ரியாத் என்னும் இடத்தில் இருக்கும் அன்புத் தந்தை றஹுமத்துல்லா, கம்பஹாவில் உம்மா பரீனா றஹுமத்துல்லா, உம்மும்மா, ஹொட்டல் பெரியப்பா, பெரியம்மா, முப்பிறமா மாமி, ரபீனா ஆன்டி, பாரூக் மாமா, கம்பான் மாமா ஆகியோர், சீரும் சிறப்புமாக நீடூழி வாழ வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

வி. இ. 166171

சேற்றில் சிக்கிய யானை

திருவள்ளுவர் தமது குறளிலே, யானையையும், நரியையும் பற்றிய ஒரு கதையைச் சொல்லியிருக்கிறார். அது ஒரு கதை போல இருந்தாலும் அதில் பெரியதோர் அரசியல் தத்துவம் அடங்கியிருக்கிறது. தன்னைப் பெரும் பலசாலியாக, பெரும் அரசியல் தலைவராக எண்ணிக் கொண்டிருப்பவர் கூட, ஒரு சிறிய தவறினால் சிக்கலில் மாட்டிக் கொண்டால், அவர் பராக்கிரமம் எல்லாம் அழிந்து விடும் என்பது தான் கதையின் தத்துவமாகும்.

வள்ளுவரின் அந்தக் குறளுக்கு அழகான விளக்கம் அளித்திருக்கிறார் கலைஞர் கருணாநிதி. பல்லாண்டுகளுக்கு முன்பு அவர் தீட்டிய இந்தக் "குறளோவியம்", இன்றைய நிலையில், அவருக்கும் பொருந்தும்; இன்னும் பல அரசியல் தலைவர்களுக்கும் பொருந்தும்.

இதோ அந்தக் குறளோவியம்—

வேல் கொண்டு வருகிறான் ஒரு வீரன். அந்த வீரனை ஒரு யானை எதிர்க்கிறது. வீரனும் யானையை வெல்ல வீராவேசத்தோடு போரிடுகிறான்.

நிமிர்ந்த நெஞ்சோடும் தாக்கிய வேலோடும் அவன் யானை மீது பாயும் போது யானையும் தந்திரமாகத் தன் தந்தங்களை நீட்டி, அந்த வீரனின் வயிற்றைக் குத்தி, அவனை மேலே தூக்கி விடுகிறது.



மரண முகப்பிலே அந்த வீரன் வேலேந்தி வேதனைக் குரல் எழுப்புகிறான். அதுவும் வீரத்தோடு கலந்து வரும் குரல்தான்.

வீரனைக் குத்திய வேகத்திலே, அந்த வேழமும் வெற்றி நடை போட்டு, ஆவேசமாகவும் ஆத்திரமாகவும் — அங்குமிங்கும் ஓடுகிறது. அப்படி ஓடும் போது ஒரு பாறைக்குப் பக்கத்திலே தேங்கி நிற்கும் சேறு நிரம்பிய குட்டையிலே காலை வைத்து விடுகிறது.

காலை எடுக்க முடியவில்லை. கனமான மிருகம் யானை; அதன் கனம் பூமியை நோக்கி இறங்குகிறதே தவிர மேலெழுந்து கரையேற யானைக்கு உதவி செய்யும் அளவினதாய் இல்லை.

யானை தவிக்கிறது. அப்போது ஒரு வேடிக்கை நடக்கிறது. என்ன அந்த வேடிக்கை?

ஒரு நரி. யானையின் நிலைமையைப் பார்த்து விடுகிறது. இதுதான் சமயமென்று, அந்த நரி யானையின் மீது பாய்ந்து தன் ஆகாரத்திற்கு வழி தேடுகிறது. யானையின் உடலெங்கும் நரி தன் பற்களாலும் — நகங்களாலும் பிராண்டி, ரத்தம் குடிக்கிறது. மாமிசமும் தின்கிறது. யானையோ, எதிர்த்திட முடியாமல் ஏங்குகிறது. வேதனை தாங்காமல் துடிக்கிறது.

சேற்றிலே மட்டும் யானை அகப்படவில்லையானால் அந்த நரி ஒரே மிதியில் கூழாகி விடும். இப்போதோ, நரிக்கு ஒரே வேட்டை! நாள் முழுதும் காட்டைச் சுற்றினாலும் இதுபோல் உணவு அதற்குக் கிடைக்காது!

வீரனையே கழற்றும் பலமுள்ள யானை, சேற்றிலே சிக்கினால் நரியிடமும் தோல்வியுறும் என்ற கருத்தை வள்ளுவர் அழகான ஓவியமாகத் தீட்டிக் காட்டியுள்ளார் குறள் மூலமாக! யானையின் வாயிலாக ஓர் அரசுக்கு வேண்டிய அறிவுரையை வழங்குகிறார்.

எத்தனை படைபலம் இருந்தாலும் ஒரு பலவீனத்தின் காரணமாக அந்த அரசு பல மற்ற எதிரிகளால் பறிக்கப்படலாம் என்பதற்காகவே வள்ளுவர் யானையின் வலிமையையும், அது சேற்றிலே செல்லாக் காசாகி விட்ட செயலையும், சிறு நரி ஜெயித்த விந்தையையும் குறளோவியம் தீட்டிக் காட்டியிருக்கிறார்.

உலகிலே போற்றப்படும் பெரும் பெரும் மேதைகளும் வீரர்களும் கூடச் சிறு தவறுகளாலேயே சிறியவர்களால் வீழ்த்தப்பட்டிருக்கிறார்கள்.

மராட்டியம் தந்த மாவீரன் சிவாஜி, காகபட்டர் என்னும் மதத் தலைவனுக்கு மண்டியிட்டான்!

உலக சரித்திரத்தின் ஜோதி விளக்குகளான சீசரும் அன்டனியும் தங்கள் சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காக்க முடியாமல் மண்ணைப் போனதற்குக் காரணம், அழகி கிளியோபாட்ரா தந்த இன்பச் சேற்றில் அகப்பட்டுக் கொண்டதனால்தானே!

சேற்றிலேயிருந்து எந்த ஒரு தேசமும் தனது காலை எடுத்துத் தீர வேண்டும் என்பதற்காகத்தான் போலும், அன்றைக்கே வள்ளுவர், யானையின் மூலம் எச்சரிக்கை செய்திருக்கிறார்!

நமக்கு மட்டுமல்ல — நாடாளும் அரசுகள் அனைத்துக்கும் நமது வள்ளுவர் தந்த குறளும் — இதோ தரப்படுகிறது!

வேல் கொண்ட வீரனைக் குத்திக் கொன்ற யானை சேற்றிலே சிக்கினால் — அதை நரி கூட எதிர்த்து அழித்துவிடும்.

"காலாழ் களரின்
நரி அடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த
களிறு".

இக்குறளின் பொருள்: வேல் ஏந்திய வீரரைக் கோத்தெடுத்த கொம்பு உடைய அஞ்சாத யானையையும், கால் ஆழும் சேற்று நிலத்தில் அகப்பட்ட போது நரிகள் கொன்று விடும் — என்பதாகும்.

விருந்தினரை வரவேற்பதில் விந்தை முறை

சீனாவில் யுனான் மாகாணத்தில் விருந்தினரை வரவேற்க ஒரு புதுமையான பழக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த வரவேற்பில் விருந்தினருக்கு மதுரசம் (வைன்) வழங்கப்படும்.

மதுரச கிண்ணத்தில் வீட்டுக்காரர் முதலில் தனது நடுவிரலை விட்டு நிலத்தில் ஒரு துளியைச் சிந்துவார். விருந்தினரிடம் கிண்ணத்தைக் கொடுப்பதற்கு முன்னர் கொஞ்சத்தைக் குடிப்பார். பின்னர் கிண்ணத்தை நீட்டுவார்.

உள்மங்கோலியாவில் திருமண வைபவங்களில் கடைப்பிடிக்கப்படும் ஒரு வழக்கம் உண்டு.

அதாவது திருமண நாளுக்கு மறுநாள் மணமகளின் குடும்பத்தினர் மணமகனின் இல்லத்தில் இருந்து பாத்திரங்களைத் திருடுவர். உடனே மணமகன் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று தனது புதிய மாமா குடும்பத்தினருக்கு வைன் கொடுக்க வேண்டும்.

வைனைக் குடித்த பின்னர் பாத்திரங்கள் திருப்பிக் கொடுக்கப்படும்.

விந்தையான இந்த விவாக முறை ஆச்சரியத்தை தருகிறது அல்லவா?

(ஐ.)

ஆழக் கடலில் சுழிகள் போல் ஆகாயத்தில் காற்றுச் சுழிகள்

ராட்சத விமானங்களையும் நொறுக்கி விடக் கூடியவை

ஆழக் கடலில் அசுரச் சுழிகள் இருக்கின்றன. இராட்சதக் கப்பல்களைக் கவிழ்க்கக் கூடிய அளவுக்கு அவை வலிமை வாய்ந்தவையாக உள்ளன.

ஆழக்கடலில் நீர்ச் சுழிகள் இருப்பது போல் ஆகாயத்திலும் சுழிகள் இருக்கின்றன. அவை காற்றுச் சுழிகள்.

நீர்ச்சுழிகள் கப்பல்களைக் கவிழ்க்கக் கூடியவை. இந்தக் காற்றுச் சுழிகள் பென்னம் பெரிய ஜெட் விமானங்களையே நொறுக்கித் தள்ளக் கூடியவை.

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் நியூ ஓர்லியன்ஸ் விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட பன்-ஆம் விமானம் ஒன்று விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துக்கு காற்றுச் சுழிதான் காரணம் என்று விஞ்ஞானிகள் கருதினார்கள்.

மேற்படி விபத்து நடப்பதற்கு சிறிது காலத்துக்கு முன் தான் காற்றுச் சுழிகள் பற்றி விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருந்தார்கள்.

அடுத்து அடுத்து நடந்த மூன்று ஜெட் விபத்துக்களுக்கு இந்தக் காற்றுச் சுழிகள் காரணமாக அமைந்தன என்பது அவர்கள் கருத்து.

காற்றுச் சுழிகளால் விமானங்கள் விபத்துக்குள்ளாவதை எவ்வாறு தடுக்கலாம்? விஞ்ஞானிகள் இப்போது இதுபற்றி தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள்.

இந்த ஆராய்ச்சித் திட்டத்துக்காக 30 லட்சம் டாலர் (சுமார் 7½ கோடி ரூபா) ஒதுக்கப்பட இருக்கிறது.

டென்வர் ஸ்டேப்லெட்டன் சர்வதேச விமான நிலையத்தைச் சுற்றியுள்ள சுமார் 5,000 சதுர மைல் பரப்பை விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சிக்காகத் தெரிவு செய்து இருக்கிறார்கள்.

அங்கே அவர்கள் ஆராய்ச்சி நடத்தினார்கள்.

நூற்றுக்கும் அதிகமான காற்றுச் சுழிகளை அவர்கள் அங்கே கண்டு பிடித்தார்கள்.

அது அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. இருபத்து ஐந்து காற்றுச் சுழிகளைக் கூட தாம் அங்கு எதிர்பார்க்கவில்லை என்று ஆராய்ச்சித் திட்டத் தலைவர் ஜோன் மெக்கார்த்தி தெரிவித்தார்.

காற்றுச் சுழிகள் பற்றிய முழுமையான தகவல்களைத் திரட்ட 1985ஆம் ஆண்டு அளவில்தான் சாத்தியமாகலாம் என்றும் மெக்கார்த்தி சொன்னார்.

காற்றுச் சுழிகளால் ஏற்படக் கூடிய விமான விபத்துக்களைத் தவிர்க்கும் திட்டத்தில் அங்கமாக விமானிகளின் பயிற்சித் திட்டத்தில் இந்தக் காற்றுச் சுழிகள் பற்றிய பாடத்தையும் சேர்த்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள்.

அத்துடன் காற்றுச் சுழிகளைப் பற்றிய தகவல்களை முன் கூட்டியே அறிந்து கொள்ள உதவக் கூடிய புதிய அமைப்பிலான "ராடார்" கருவிகள் ஒவ்வொரு விமான நிலையத்திலும் பொருத்தப்பட இருக்கின்றன.

ஆனால் எதிர்பார்க்கின்ற பலன் இந்த ராடார்கள் மூலம் கிடைக்குமா என்பது குறித்து சந்தேகம் கிளப்பப்பட்டு உள்ளது. இந்தச் சந்தேகம் கிளம்புவதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உண்டு.

இரண்டு நிமிட நேர அளவைக் கொண்ட காற்றுச் சுழிகளைப் பற்றி இந்த ராடார்கள் தகவல் திரட்டி, துரித நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்பே காற்றுச் சுழி ஓடி மறைந்து விடும். இது ஒரு காரணம்.

மற்றக் காரணம் - காற்றுச் சுழிகள் எவ்வாறு உருவாகின்றன என்பது பற்றிய உண்மை இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

இது போக, விமானத்திலேயே ராடார் கருவியைப் பொருத்துவது பற்றியும் ஆராய்ச்சி நடத்தினார்கள்.

லேசர் கருவியைப் பயன்படுத்தும் ஒரு முறையை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் ஆராய்ந்தார்கள். இது நம்பிக்கை தருவதாக அமைந்தது. எதிரில் இருக்கும் காற்றுச் சுழி பற்றிய தகவலை மூன்று நிமிடங்களுக்கு முன் விமானிக்கு அறிவிக்கும்.

தக்க தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்கு அந்த மூன்று நிமிடங்கள் போதுமானது என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

சிறுநீர் பையில் வளரும் கற்களை தகர்க்க இயந்திரம் கண்டுபிடிப்பு

சிறு நீர்ப் பையில் உண்டாகும் கற்களை அறுவை சிகிச்சை இல்லாமல் அகற்றுவதற்கு மேற்கு ஜெர்மனியில் மூனிச்சில் உள்ள பேராசிரியர் கிறிஸ்டியன் சாஸ்சி ஒரு புதிய வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்.

மின்சார அதிர்ச்சி அலைகளின் மூலம் சிறுநீர்ப் பை கற்களை நொறுக்கி வெளியாக்குவதே அந்தப் புதிய முறையாகும். தண்ணீருக்குள் வைத்து மின்சார அதிர்வு அலைகள் அந்தக் கற்களின் மீது பாய்ச்சப்படுகின்றன.

சிறுநீர்ப் பைக்குள் உள்ள கற்கள் சிறு தூள்களாக உடைந்து இயற்கையாக வெளியாகிவிடுகின்றன. வேறு பாதிப்பு எதுவும் இல்லை.

இந்த மின் அதிர்வு ஒலி அலை இயந்திரத்தை டோர்னியர் என்ற விமானங்கள் தயாரிக்கும் நிறுவனம் உருவாக்கியுள்ளது. அந்த இயந்திரத்தை மேலே உள்ள படத்தில் காணலாம்.

SWISS ROSES·ORCHIDS · SHEETS · BED SPREADS
TOWELS · PILLOW CASES

LEVI'S
GENUINE–IMPORTED

டெனிம் கொட்டன் ஜீன்ஸ், அமெரிக்கா லீவிஸ் ஸ்றவுஸ் செவ், பிரான்சிஸ்கோவில் இருந்து ஆடவர், மகளிருக்கான உன்னத நவ மோஸ்தர்கள் 490/– ரூபாவில் இருந்து,ஜீன்ஸ்களுக்கு பொருத்தமாக அணியக்கூடிய செப் வகைகள் ஒன்று 150/– Ideal for Travelling—Sports—Getabouts.

NO PARKING PROBLEM

S-H-O-B-H-A-S
463. GALLE ROAD-COLOMBO-3
DIAL-81888

ALSO MOSQUITO NETS

ஆண்களுக்கு மாத்திரம்

ஆண்களின் இரகசிய நோய்களான ஆண்மைக் குறைவு, வீரியமின்மை, துரித ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, இல்லறத்தில் விருப்பமின்மை ஆகிய கோளாறுகளுக்கு 30 வருட அநுபவமுள்ள என்னை நேரில் சந்தியுங்கள் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளுங்கள். இரகசியங்கள் யாவும் பாதுகாக்கப்படும்.

Dr. ஏ. முகம்மது
Regd. No. 6345
கொழும்பு மெடிக்கல் சென்டர்,
190, ஜெம்பட்டா வீதி, கொழும்பு — 13.

ஆஸ்த்மா

என் மனைவிக்கு கடந்த 6 வருடங்களாக இருந்த மார்ச்சளி, இழுப்பு, மார்பில் ஏற்படும் "கர் கர்" என்ற சத்தம் ஆகியவைகளை டாக்டர் அப்துல்லா முகம்மது அவர்கள் பூரணமாகச் சுகப்படுத்தி விட்டார். என் மனைவியின் நோய்க்கு நான் செய்யாத வைத்தியமில்லை, காணாத டாக்டர்கள் இல்லை நன்றி.

திரு. பீ. சாய்ந்தியாப்பிள்ளை
போஸ்ட் மாஸ்டர் கரவெட்டி.

சிறு வயது முதல் எனக்கு தீராது இருந்து வந்த ஆஸ்த்மா நோயை டாக்டர் ஏ. முகம்மது அவர்கள் ஒரே ஒரு மருந்தில் சுகப்படுத்தி விட்டார் என் அன்பு கனிந்த நன்றியுடன், பாராட்டுகிறேன்.

ஜனாப் ஏ. எம். உவைஸ்
30, பங்கொன்னாமட ரத்துகொதநாதிவல அக்குறனை.

எனது மனைவிக்கு பல வருடங்களாக இருந்த ஆஸ்த்மா என்ற மார்ச்சளியை டாக்டர் முகமது அவர்கள் சுகப்படுத்தி விட்டார் நன்றி.

திரு. இ. இராசமாணிக்கம்
8 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

அன்புள்ள டாக்டர் முகம்மது அவர்கட்கு, தங்கள் ஆஸ்த்மா மருந்துகளை நான் விநியோகித்து பல பேர்களுக்கு நல்ல சுகம், நன்றி.

திரு. வி. நடராஜா
புயகம கிழக்கு கூட்டுறவுச் சங்கம் அக்கரப்பத்தனை.

கடந்த 7 வருடமாக என் அம்மா ஆஸ்த்மா என்ற இழுப்பு நோயால் பட்ட துன்பமும் கஷ்டமும் எழுத்தில் அடங்காது. நாங்கள் செய்யாத வைத்தியம் இல்லை. தங்களின் மருந்துகளைப் பாவித்த பின் இழுப்பு பூரணமாக நின்று – நன்முகச் சாப்பிட்டு நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறார். கடவுளுக்கு அடுத்தபடியாக உங்களுக்கு என் நன்றி.

ஒப்பம்: திருமதி லலிதா பழனிதம்பு
லலிதா ஸ்டோர்ஸ் மூத்தையன்கட்டு,
ஒட்டுசுட்டான்

புனிதமான ஸ்பெஷல் மருந்துகள் மூலமாக ஆஸ்த்மா என்ற மார்ச்சளியை பூரணமாகவும் நிரந்தரமாகவும் குணப்படுத்தப்படுகிறது.

விலை ரூ. 45/–, தபால் 5/–

இன்னும் வயிற்றுக் கோளாறுகள் ஜீரணக் குறைவு உடல் மெலிவு, பலவீனம், மூல வியாதிகள், புண், சொறி எக்ஸிமா, தலைமுடி விழுதல், ஆகிய நோய்களுக்கும் 30 வருட கால அநுபவமுள்ள டாக்டர் ஏ. முகம்மது அவர்களால் சிகிச்சை அளிக்கப்படும்.

சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு மெடிக்கல் சான்றிதழ் இலவசம்.

Dr. A. MOHAMED
Regd. No. 6345
கொழும்பு மெடிக்கல் சென்டர்,
190, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13

சாய்ந்தமருது ப. நோ. கூ. சங்கம்

பதவி வெற்றிடம்

கணக்காளர் தரம் – III

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 26.09.1983 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும். விபரங்களையும் விண்ணப்ப பத்திரத்தினையும் பெற "பொது முகாமையாளர், ப. நோ. கூ. சங்கம் சாய்ந்தமருது" என்ற விலாசத்துக்கு சுய விலாசமெழுதப்பட்ட முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்ளவும்.

தலைவர்,
ப. நோ. கூ. சங்கம்
சாய்ந்தமருது

1983/08/25

விளம்பரமின்றி வியாபாரமில்லை

"மந்திரயோகி" வசிய, மாந்திரீக, வைத்தியம்

அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் C433

அன்பர்களே! சூனியம், வசியமருந்திடு, பேய் பிசாசுக் கோளாறுகள், கண்ணூறு, நாவூறு, ஆண் பெண் இரகசிய பாலியல் நோய்கள், தடைப்பட்ட மாதவிடாய்க் கோளாறுகள், தீராத நோய்கள், பிரச்சினைகளை அனுமான் அஞ்சன மை வெளிச்ச மூலமாகவும், மாந்திரீகக் குறி மூலமாகவும் அறிந்து, மருந்து, அக்குப்பங்சர், ஹிப்நாட்டிச மனோவசிய யோக சிகிச்சை மூலமாகவும், தெய்வத் துணை கொண்டு மாந்திரீக சக்தியினாலும் தீர்த்துக்கொள்ள, குடியை மறக்க, எதிரியை அடக்க, விரும்பியவர்களை வசியமாக்க, பரீட்சையில் சித்தியடைய, நேர்முகப் பரீட்சையில் ஈடுபட, தொழில் கிடைக்க, வியாபார விருத்தி அடைய, அதிர்ஷ்டம் கிடைக்க, வழக்கு வெல்ல, வீடு, வளவு, உடலைக் காவல்பண்ண, மட்டக்களப்பு நான்காவது பாரம்பரை வைத்தியர், மலையாளத்திலேயும், மாந்திரீக சித்தர் என அழைக்கப்படும், மாந்திரீகக் கலாநிதி, சித்த மருத்துவ பண்டிட் மனோதத்துவ டாக்டர் "மந்திரயோகி" M.B.B.S. (H) S.M.P. (இந்தியா) D.Ac (இலங்கை)யுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

ஆண், பெண் (காதலன் – காதலி) வசியம்:— நீங்கள் விரும்பும் பெண் அல்லது ஆணை வசியமாக்கி எல்லோருடைய சம்மதத்துடனும் திருமணஞ் செய்ய முதல் கடிதத்திலேயே முழு விபரமும், இருவரின் பெயர்களும், தெரிந்தால் தாய் தந்தையர்களின் பெயர்களும், ஏமாற்ற மாட்டேன் சத்தியமாகத் திருமணம் செய்வேன் என்றும், பெண்ணைக் காப்பாற்றும் தகுதி அறிய தொழில், வருவாய் பற்றிய விபரமும் எழுத வேண்டும். நேரில் வர முடியாதவர்களுக்கு மருந்து மந்திரம் செய்து பார்சலில் அனுப்பப்படும். 3 ரூபா 50 சத முத்திரையும் 50 சத முத்திரை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரும் அனுப்புபவர்களின் விடயங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும். 10 ரூபாவிற்கு மணியோடர் அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும்.

டாக்டர் "மந்திரயோகி"
இந்தியன் வைத்தியசாலை
கல்லடி, மட்டக்களப்பு
BATTICALOA

மணிக் கவிதை

நினைவுச் சுமை

அன்பே...!
முன்பொரு நாள் — நான்
உன்னைச் சந்தித்த போது
உன் விழியும் —
என் விழியும் கொண்ட
விபரீத உறவால்
என் இதயக் கருவறையில்
நினைவுச் சிசுவொன்று
வளர்ந்தது — அது
இதயக் கருவறையிலிருந்து
இம்மண்ணில் பிறப்பதற்கு
இன்றும் வழி இல்லை!

★ சி. எம். சங்கர்

கவிதை

கற்பனைப் பெரியோரின்
நிச்சயத்தால் இணைக்கப்பட்ட
ஏடு, எழுத்தாணி
இருவரின் தூய உறவில்
பிறந்த
இன்ப குழந்தை.

★ மல்லிகா இரங்கசாமி

ஒளி

கடலிலும்
சூரியனிலும்
நிலவிலும்
நிலவும்
நீ, சில
மனிதர்கள்
மனங்களில்
உலவ
மறுப்பதேன்
ஒளியே!

★ க. சி. செல்லத்துரை

அன்றும் இன்றும்

அன்று —
காதல் தேரேறி
காதலன் எனக்களித்த
இனிய முத்தங்களால்
என் கன்னங்கள்
செந்தாமரையின
இன்று, நான்
திருமண விலங்கணிந்த
மனைவித் கைதி
இப்போது —
என் கன்னம் மட்டுமன்றி
காயம் முழுவதும்
செந்தாரம்தான்.
இது அவன் நாசி தந்த
முத்தந்தால் அல்ல
இரும்புக் கால்களும்
விலங்குக் கரங்களும்
இடை விடாதளித்த
துன்ப முத்தங்களால்.

★ தம்பிலுவில் ஜெகா

மாற்றம்

தனிமையை அன்று
வெறுமையாய் நினைத்து
இனிமையைத் தேடி
இதயத்தைத் திறந்து
விட்டேன்!
அங்கே நுழைந்தவளும்
வெறுமையை தந்ததினால்
தனிமையே இன்று
இனிமையாய் தெரிகிறது!

★ டி. எம். சுபைர்கான்

ஸ்ரீ-இளவலுக்கு பத்திரிகையாளர் குள்ள நரிகளாம்

பத்திரிகைக்காரர்களை என் அண்ணி, நரிகள் என்கிறார். ஆனால் அவர்கள் குள்ள நரிகள் அல்லது கழுதைப் புலிகளாக அல்லவா இருக்கிறார்கள்!

இவ்வாறு கூறுகிறார் பிரிட்டிஷ் இளவரசர் அண்ட்ரூ.

இரண்டு வார விடுமுறையைக் கழிப்பதற்காக லேக்பிலிட் நகருக்கு சென்றிருந்த 22 வயதுடைய மேற்படி இளவரசரை, அவருடைய முன்னாள் பாடசாலை தோழர் ஒருவர் பேட்டி கண்டார்.

அப்பொழுதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார், தொடர்ந்து அவர் தனது பேட்டியின் போது குறிப்பிடுகையில்,

என்னைப் பற்றி வெளியிடப்படும் செய்திகளில் ஐந்து வீதமானவைதான் உண்மையாகும். திரைப் படத்தில் நாம் பார்ப்பது அனைத்தும் உண்மையல்ல, அவ்வாறே பத்திரிகைகள் வெளியிடும் செய்தியில் 95 வீதமானவை பொய்யாகும்.

இவ்வாறு கூறும் அவர், தாம் ஒரு காதல் மன்னன் அல்ல என்றும் 30 வயதுக்கு முன் திருமணம் செய்து கொள்ள தாம் எண்ணவில்லை என்றும் தெரிவித்தார். (ர—11)

நல்லபாம்பு கடித்தால் குஷ்டம் குணமாகுமா?

இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தில் யாவத்மால் என்னும் இடத்தில் மஹத்லா என்று ஒரு கிராமம் இருக்கிறது.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த இரு குஷ்ட ரோகிகளுக்கு மூட நம்பிக்கை தோன்றியது.

நல்ல பாம்பு கடித்தால் குஷ்ட நோய் பறந்து விடும் என்று இவர்களிடம் யாரோ சொல்லி விட்டார்கள்.

ஒருவர் காட்டுக்குப் போய் கஷ்டப்பட்டு நல்ல பாம்பு ஒன்றை பிடித்து வந்தார். அது அவரைப் பலமுறை கடித்தது. பின்னர் அது இறந்தது. கடிபட்ட குஷ்ட ரோகிக்கு ஒன்றும் ஆகவில்லை.

இதைப் பார்த்த அடுத்தவருக்கு உற்சாகமும், நம்பிக்கையும் பிறந்தன.

அவரும் ஒரு பாம்பைக் கொண்டு வந்தார். பாம்பு அவரைக் கடித்தது. குஷ்ட ரோகி இறந்தார், பாம்பும் கூடவே இறந்தது.

அதன் பிறகு முந்திய குஷ்ட ரோகியும் இறந்தார். (ர)

புற்று நோய்க்கு வெங்காயம் சிறந்த மருந்து

மனிதர்களைக் கொல்லும் நோய்களில் புற்று நோயும் ஒன்று.

அந்த நோயிலிருந்து தப்ப வேண்டுமானால், நாள்தோறும் ஒரு பெரிய வெங்காயம் சாப்பிடுங்கள்!

புற்று நோய்க் கிருமிகளைக் கொல்லும் சக்தி வெங்காயத்துக்கு உண்டு என அண்மையில் நடத்திய ஆய்வொன்றிலிருந்து தெரிய வந்துள்ளது. (ர-11)

உலகின் மிகப் பெரிய திருமணக் கேக்



டென்மார்க்கிலுள்ள உல்லாச பயணத்துறை நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான 62 வயது சைமனுக்கும் அவரிடம் செயலாளராகப் பணிபுரியும் 20 வயது ஜல்லிக்கும் கோபன் ஹேகனில் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. அந்தத் திருமணத்திற்காக விசேஷமான முறையில் 37 அடி உயரத்திற்குத் தயாரிக்கப்பட்ட "கேக்" இது. (ர)

கொங்கிரீட் கட்டைகளாக மாறிய பஞ்சு

பாங்கொக்கில் இருந்து ஜப்பானுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 43,000 பஞ்சு மெத்தைகள் கொங்கிரீட் கட்டைகளாக மாறிவிட்டன.

இந்த மெத்தைகள் கொள்கலன்களில் போட்டு சீல் வைத்து ஜப்பானுக்குக் கொண்டு செல்லப்பட்டன.

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவை இந்தக் கொள்கலன்கள் வந்தடைந்த பின் அவற்றைத் திறந்து பார்த்த போது பஞ்சு மெத்தைகள் கொங்கிரீட் கட்டைகளாக மாறி இருந்தன.

பொலிஸார் உடனடியாக விசாரணையை மேற்கொண்டனர்.

மிட்சுபிசி கம்பெனி பாங்கொக் நிறுவனம் ஒன்றுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஒன்றின்படியே மேற்படி 66,000 டாலர் பெறுமதியான பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

"கொட்டன்" என்று கட்டளைப்பத்திரத்தில் இருந்த ஆங்கிலச் சொல்லை "காங்கிரீட்" என்று தவறுதலாக வாசித்ததால் இந்த விபரீதம் ஏற்பட்டது என்று விசாரணைகள் மூலம் தெரியவந்தது. (ர-16)



டைப்பிஸ்ட்: சார்! என்னையும் உங்களையும் சேர்த்து எல்லாரும் கிசுகிசுன்னு பேசுறாங்க அதனால ....

மனேஜர்: அதனால...? வேலையை ராஜினாமாச் செய்யப் போறியா...?

டைப்பிஸ்ட்: சீச்சீ... அதனால உங்களையே கட்டிக்கலாம்னு யோசிக்கிறேன்...

பலரசத் திரட்டு

இது ஒரு காதல் கடிதம்

அன்பே!

நாம் பிரிய வேண்டிய நேரம் வந்து விட்டது. எமது பிரிவை இனிமேல் எவராலுமே தடுக்க முடியாது.

உன்னை அடைந்ததில் நான் பெற்ற பெருமை கொஞ்சமா? உன்னைப் பிரிவதில் இன்று நான் அனுபவிக்கும் துயரம் சொல்ல முடியுமா?

அன்றொரு நாள் —

கால்பேஸுக்குப் போனோம். உன் பட்டுப் போன்ற பூமேனி என் கட்டான உடலைக் கட்டித் தழுவ, நான் அடைந்த ஆனந்தம் ஒருபுறம் இருக்க, உன்னழகை மற்றவர்கள் கண்டு ரசித்துப் பொறாமைப் பட்டதை நான் பெருமையாகக் கொண்டேன்.

அன்று மழை பெய்தது. காற்றுப் புக முடியாதவாறு என்னோடு ஒட்டிக் கொண்டாய். எப்படி மறப்பேன்? இப்போது நினைத்தால் கூட உடல் புல்லரிக்கின்றதே.

இவ்வாறு வளர்ந்த நமது இன்ப உறவில் ஒரு நாள் திடீரென கிழிசல் ஏற்பட்டது.

பக்கத்து வீட்டு ராமு அண்ணைதான் தக்க தருணத்தில் அந்தக் கிழிசலைப் போக்கினார்.

அதன் பிறகும் எமது உறவில் அடிக்கடி கிழிசல்கள் ஏற்பட்டன. அதற்காக நான் வருத்தப் பட்டேனே தவிர உன் மீது எனக்கு வெறுப்போ கோபமோ துளியும் ஏற்படவில்லை. டெயிலர் அண்ணை தம்மால் இயன்ற வரை உதவினர். அவராலும் எவ்வளவு காலம்தான் உதவ முடியும்?

இன்று அவரும் கைவிரித்து விட்டார்.

எனவே, என் அருமை "ரெங்லர்" சேர்ட்டே, உன்னை விட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிகிறேன்.

என்றும் உன் நினைவுடன்
இருக்கும்,
தா. நாராயணன்.



அமெரிக்காவின் போஸ்டன் நகரில் 53 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட மாடிசன் ஹோட்டலின் அஸ்திவாரத்தில் வெடி குண்டுகள் வைத்து அக்கட்டடம் தகர்த்தப்பட்ட போது இப்படங்கள் பிடிக்கப்பட்டன. அரசு அலுவலகம் ஒன்றை கட்டுவதற்காக இந்த ஹோட்டல் இடிக்கப்பட்டது. (ர)

"செக்ஸ்" பாடம் படித்ததன் விபரீத விளைவு

மாணவர்களுக்கு ஆண் - பெண் உறவு பற்றிய "செக்ஸ்" பாடங்களை சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று சில நிபுணர்கள் கூறி வருகிறார்கள். சுவீடன், அமெரிக்கா, மேற்கு ஜெர்மன் போன்ற நாடுகளில் பாலியல் பற்றி மாணவர்களுக்கு கற்பித்தும் வருகிறார்கள். சமீபத்தில் இருந்து பெங்களூரிலும் மகளிர் கல்லூரி ஒன்றில் மாணவிகளுக்கு செக்ஸ் பாடம் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

இவ்விதம் மாணவர்களுக்கு ஆண் - பெண் உறவு பற்றிய பாடம் சொல்லிக் கொடுப்பதால் என்ன விளைவு ஏற்படுகின்றது?

சுவீடன் நாட்டில்தான் முதன் முதலில் செக்ஸ் கல்லூரியில் ஒரு பாடமாக படிப்பிக்கப்பட்டது. அங்கே கடந்த 20 வருடங்களாக மாணவர்களுக்கு மேற்படி பாடத்தை கற்பிக்கிறார்கள். அதனால் ஏற்பட்ட விளைவு என்ன என்பதை சில நிபுணர்கள் அண்மையில் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதன் விளைவுகள் வருமாறு:

சுவீடன் நாட்டில் கல்யாணமாகாத பெண்களில் 35 சதவீதமானோர் கர்ப்பமாக இருக்கிறார்கள், கல்யாணத்துக்கு முன்னே அவர்கள் வயிற்றில் குழந்தை இருக்கிறதாம்,

100 பெண்கள் கர்ப்பமானால் 5 பேர் சட்டப்படி கர்ப்பத்தை அழித்து விடுகிறார்கள், 20 பேர் கள்ளத்தனமாக கர்ப்பத்தைக் கலைத்து விடுகிறார்கள்.

இதுவேயோ, அங்குள்ள ஒவ்வொரு மாணவனும் சுமார் 200 பெண்களிடமாவது உறவு கொண்டிருப்பான் என்று புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

சுவீடன் நாட்டில் செக்ஸ் கல்வியினால் ஏற்பட்ட விளைவுகள் தான் இவை. (ர-11)

உங்கள் உணவிற்குள் சிறிதளவு அஜி-நொ-மோட்டோ தூவுங்கள்!

நீங்கள் சமைப்பது இறைச்சிக் கறியாக இருக்கலாம், மரக்கறியாக இருக்கலாம் அல்லது சாதாரண தேங்காய்ச் சம்பலாகவும் இருக்கலாம், சோறு, பொரியல், அவியல், சுசி அல்லது எதுவாகவும் இருக்கலாம். உங்கள் சமையல் எதுவாக இருந்தாலும் சிறிதளவு அஜி நொ மோட்டோவைத் தூவி உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குங்கள். கரும்பு, பீட்றூட், மரவள்ளி முதலியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து எடுக்கப்படும் அஜி நொ மோட்டோவை உலகெங்கிலும் 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.

சந்தைப்படுத்துவோர்:
கேலஸ் சந்தைபடுத்தும் பிரிவு
விலை: ரூ. 1/20 லிருந்து

அஜி-நொ-மோட்டோ
உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Grant K & E 4692

பெண்களுக்கு கால்சட்டை வேண்டாம்

பெண்கள் கால்சட்டை அணிவதை எல்லா இளைஞர்களும் ரசிக்கும் போது ஒரே ஒரு நாட்டில் உள்ள இளைஞர்கள் மாத்திரம் அதனை வெறுக்கிறார்கள்.

கால்சட்டை அணியும் பெண்களைக் கண்டால் அவர்களைக் கூட்டமாகச் சூழ்ந்து கொண்டு படாத பாடுபடுத்தி விடுகிறார்கள்.

தென் ஆபிரிக்காவிலுள்ள சுவாஸிலாந்து இளைஞர்கள்தான் பெண்கள் கால்சட்டை அணியும் அழகை வெறுக்கிறார்கள்.

சமீபத்தில் கலவரமான சம்பவம் ஒன்று நடந்தது.

இங்குள்ள மபாபனே பஸ் நிலையத்துக்கு அருகில் சில யுவதிகள் கால்சட்டையுடன் வந்தனர். இதனைக் கண்ட இளைஞர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா?

அந்தப் பெண்களை ஓட ஓட விரட்டினார்கள், அவர்களுடைய கால்சட்டைகளையும் கழற்றி விட்டார்கள்.

சுவாஸிலாந்து மக்கள் தங்கள் கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணுவதில் அதிக அக்கறை கொண்டவர்கள். மேற்கத்திய "ஸ்டைலை"ப் பின்பற்றி பெண்கள் காற்சட்டை அணிவதால் இந்தக் கலாசாரப் பாரம்பரியங்கள் பாதிக்கப்படுகின்றன என்று அவர்கள் நம்புகிறார்கள். (ர-16)

இதோ! மிகப்பெரிய லாபம்

கிறாம் 426 நிறையான டின்
கிங்பிஸ் மேகரல்
போஷாக்குள்ளது, சுருசியானது
எங்கும் கிடைக்கும்.

விநியோகஸ்தர்:
எச். டோன் கரோலிஸ்
அன்ட் சன்ஸ் லிமிட்டெட்
64, கெய்சர் வீதி, கொழும்பு 11.
தொலைபேசி இல. 25676

கிறாம் 426
ரூ. 14/25
மட்டுமே

தரமான, மலிவான உணவு
கிங்பிஸ் மேகரல்
Kingfish
Extra Quality
SALMON STYLE
MACKEREL
IN NATURAL OIL

சிலுக்கின் குரல்கேட்டு மிரண்டு ஓடியது புலி!

மெஜஸ்டிக் ஸ்டுடியோவில் கரடி, புலி, மலைபாம்பு, குரங்கு இவற்றோடு சிலுக்கு நடித்துக் கொண்டிருந்தார்.

சிலுக்கு புலித்தோலை ஆடையாக உடுத்தி இருந்தார். அதே உடையில் இன்னொருவரும் இருந்தார். அவர்தான் கதாநாயகன் ராஜ்கமல்.

டேப்பில் பாட்டைப் போடச் சொல்லி விட்டு "ஸ்டார்ட்" என்றார் புலியூர் சரோஜா.

"வாழைப்பழம்... அருமையான வாழைப்பழம்" என டேப் முழங்க அனைவரும் ஆடினார்கள். சிலுக்கும் ஆடினார்.

காட்சியை எடுத்து முடித்ததும் "பிரேக்" அறிவிக்கப்பட்டு விட்டதால் சிலுக்கு அவசரமாக காரில் ஏறிக்கொண்டு விட்டார்.

தயாரிப்பாளர் கே. தர்மராஜையும், டைரக்டர் பாப்ஜியையும் சந்தித்து பேட்டி கண்ட போது —

"இது ஒரு காதல் கதை. கதாநாயகி சிலுக்கு பாப் சிங்கராக வருகிறார். இந்த இருவருக்கும் ஏற்படும் காதல்தான் கதை. கதாநாயகி பெயர் சாராங்கனி.

நான் இதற்கு முன்பு இரண்டு இந்திப் படங்களை எடுத்திருக்கிறேன். பல படங்களுக்கு மியூசிக் டைரக்டராக இருந்திருக்கிறேன். இந்தப் படத்தில் நான் நடிக்கவில்லை. என் சகோதரி ரேகாவும் நடிக்கவில்லை. இப்படத்தின் கதை, வசனம், பாடல்கள், இசை டைரக்ஷன் எல்லாவற்றையும் நான்தான் கவனித்து வருகிறேன். இந்த வாழைப்பழ பாட்டு நான் எழுதியதுதான். இப்பாடல் காட்சியில் நடிக்க புலி, பாம்பு, கரடி, குரங்கு எல்லாம் வந்திருக்கிறது" என்று பாப்ஜி சொன்னார்.

புகைப்படக்காரர் நேஷனல் செல்லையா சொன்ன கதை இதுதான்.

சிலுக்கை புலி துரத்தியது. குகையின் மேல் பகுதியில் படுத்திருந்த புலியிடம் சிலுக்கு ஒய்யாரமாக நடந்து போக, புலி அவரைப் பார்த்து உறும, சிலுக்கு பயந்து போய் "வீல்" என்று கத்த, சிலுக்கு குரலைக் கண்டு புலி மிரண்டு ஓட, சிலுக்கு பயந்து ஓட ஒரே தமாஷாக இருந்தது.

பத்து நிமிடங்கள் செட்டில் ஒரே அமளிதான். கடைசியில் புலியைப் பிடித்துக் கட்டினார்கள்.

சிலுக்கு சுமிதாவின் கவர்ச்சி நடனத்தைக் கண்டு ரசிகர் கூட்டம் மயங்கிக் கிடக்கும் இவ்வேளையில், அவரது குரலைக் கேட்டு பயந்து ஓடவும் ஒரு ஜீவன் இருந்திருக்கிறதே!

(ஐ-10)

இளையராஜாவின் அண்ணன் டைரக்டர் ஆகிறார்

இளையராஜாவின் தம்பி கங்கை அமரனை தொடர்ந்து அவரது அண்ணன் ஆர். டி. பாஸ்கரும் டைரக்டர் ஆகிறார்.

டி. டி. சிவி ஆர்ட்ஸ் சார்பில் ஒளிப்பதிவாளர் நிவாஸ் தயாரிக்கும் புதிய படம் "[illegible]."

இந்தப் படத்தைத் தான் இளையராஜாவின் அண்ணன் ஆர். டி. பாஸ்கர் டைரக்ட் செய்கிறார்.

இதற்கான கதை திரைக்கதையும் அவரே எழுதுகிறார். வசனம், பாடல்களை கங்கை அமரன் எழுத இளையராஜா இசை அமைக்கிறார்.

சிலுக்குசுமிதா ஓர் மாறுபட்ட வேடத்தில் நடிக்கும் இதன் கதாநாயகன் கதாநாயகி தேர்வு நடக்கிறது. (ஐ—10)

அரைகுறை ஆடையாலும் பரத நாட்டிய அபிநயம் காட்டலாம் என்பதை நிரூபிக்கும் முயற்சியில் அனுராதா. "மலர்கள் நனைகின்றன" படத்தில்.

(ஐ-10)

இரண்டு கன்னியருக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்டு விடுபட முடியாமல் தத்தளிக்கும் நிலை இந்தக் காளைக்கு ஏன் வந்தது? "சரணாலயம்" படத்தில் நளினி, மோகன், பொன்னி.

(ஐ-10)

ரௌடியாக மாறினார் மாதவி!

அந்தச் சிறுமியின் கண் முன்னால் அவள் தந்தையைக் கொன்று விடுகிறார்கள் முரடர்கள். அதை அவளால் தடுக்கமுடியவில்லை.

ஆனால் அவள் உள்ளத்தில் அது வெறியாக மாறுகிறது. அவள் பெரிய ரௌடியாகிறாள். அவள் போகுமிடமெல்லாம் அடிதடி சண்டை. குண்டர்கள் அவளைக் கண்டு அஞ்சுகிறார்கள்.

பெண்ணா இல்லை பெரும் சண்டைக்காரியா என்று பயப்படுகிறார்கள். அவளை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. "அம்" என்றால் பெல்ட் ராணியாகி விடுகிறாள். "உம்" என்றால் புல்லட் ராணியாகிவிடுகிறாள். "ஊ" என்றால் அடிதடி ராணியாகி விடுகிறாள்.

இவள்தான் டக்கர் பேபி.

இப்படத்தில் மாதவி புதிய முறையில் நிறைய சண்டைகள் போடுகிறார். சண்டை போடுவதில் மரண அடி மல்லம்மா என்றால் மின்னல் வேகத்தில் கார் ஓட்டுவதில் அசகாய சூரர் ஆகவும் இருக்கிறார்.

ராஜ்குமார் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் சங்கர், பாலன், கே. நாயர், சிலோன் மனோகர், ஜஸ்டின், உசிலைமணி, இரஸ் மோகன், குண்டு கல்யாணம், மாஸ்டர் சுரேஷ், பூர்ணிமா ஜெயராம், ஜெயமாலினி அனுராதா மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

ஜே. வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்ய ரகு எழுதிய பாடல்களுக்கு, கங்கை அமரன் இசை அமைக்கிறார்.

"உருவங்கள் மாறலாம்" வெற்றிப் படத்தை உருவாக்கிய "ஆர் த்ரீ" எஸ்வி. ரமணன், அடால்வரம் ராம்ஜி, ரகு ஆகியோர் மேற்பார்வையில் இந்தப் படம் தயாராகி வருகிறது.

(ஐ-10)

ரஜனியின் தாயாக விஜயகுமாரி

கவிதாலயம் பட நிறுவனம் எஸ். பி. முத்துராமன் டைரக்ஷனில் ரஜினிகாந்த் – ராதா நடிக்க புதுப்படம் ஒன்று தயாரிக்கிறது அல்லவா!

இந்தப் படத்தில் ரஜினிகாந்த தாயாக விஜயகுமாரி நடிக்கிறார்.

எம். என். நம்பியார், வி. கே. ராமசாமி, சோ, செந்தாமரை, உமா நடிக்கிறார்கள்.

ஏ. எல். நாராயணன் வசனம் எழுத, இளையராஜா இசை அமைக்க, பாபு ஒளிப்பதிவு செய்கிறார். ஏவி. எம். படப்பிடிப்பு நிலையத்தில் படப்பிடிப்பு தொடங்குகிறது. (ஐ—10)

இந்தியில் "தாய் வீடு"

தேவர் பிலிம்ஸ் நிறுவனத்தினர் "தாய்வீடு" படத்தை தமிழிலும், இந்தியிலும் தயாரித்தார்கள் அல்லவா?

இதையடுத்து தேவர் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்தி படத்தில் ரஜினிகாந்த்–ராஜேஷ் கன்னா இணைந்து நடிக்கிறார்கள்.

சி. தண்டாயுதபாணி தயாரிக்க ஆர். தியாகராஜன் டைரக்ட் செய்கிறார்.

வி. ராமமூர்த்தி ஒளிப்பதிவு செய்ய பாபிலஹரி இசை அமைக்கிறார்.

இந்தப் படத்தில் இடம் பெறும் பாடல்கள் அனைத்தும் பம்பாயில் ஒலிப்பதிவு செய்யப்படுகிறது. (ஐ—10)

"கையை முறுக்கிக் கொண்டால் ஆட்டம் எப்படி வரும்?" முகத்தை சுளிப்பவர் சிலுக்கு சுமிதா. கையை முறுக்குபவர் பிரபு. படம்: சூரக்கோட்டை சிங்கக்குட்டி.

(ஐ-10)

ஆடல் அழகி சுலக்ஷணாவை கள்ளச் சாமியார் கடத்தல்

சுலக்ஷணாவை ஜெய்கணேஷ் கடத்திச் சென்றார்.

கோவில்களில் நாட்டியம் ஆடிப் பிழைக்கும் சுலக்ஷணாவின் தகப்பனார் ஓர் குடிகாரன் என்பதை அறிந்த ஜெய்கணேஷ் சாமியார் போன்று வேடமணிந்து வந்தார்.

கோயிலில் நடனம் ஆடவேண்டும் என்று கூறி, சுலக்ஷணாவைக் கடத்திக் கொண்டு சென்றார்.

அதை அறிந்த சுலக்ஷணாவின் காதலன் ராஜேஷ், வேகமாக அவர்களைப் பின் தொடர்ந்து சென்றார். காரை மறித்து, ஜெய்கணேஷுடன் பயங்கரமாக மோதிச் சண்டையிட்டார்.

இப்படி ஒரு காட்சி, ரேவதி சினி கிரியேஷன்சார் தயாரிக்கும் "யாமிருக்க பயமேன்?" படத்திற்காக படமாக்கப்பட்டது.

ராஜேஷ், சுலக்ஷணா, ஜோடியாக நடிக்கும் இதில் கே. ஆர். விஜயா, பூர்ணிமா ஜெயராம், அம்பிகா, விஜி, மனோரமா, ஜெய்கணேஷ், தேங்காய் சீனிவாசன், திலீப் மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

ஆர். கே. சண்முகம், கதை வசனம் எழுத கே. சங்கர் டைரக்ட் செய்கிறார். டி. வி. ராஜாராம் ஒளிப்பதிவு செய்கிறார். எம். எஸ். விசுவநாதன் இசையமைக்கிறார். டி. எஸ். சேதுராமன் தயாரிக்கிறார். இதன் படப்பிடிப்பு தொடர்ந்து நடக்கிறது. (ஐ—10)

தாய்லாந்தில் படப்பிடிப்பு

"நாம் பிறந்த மண்", "அழைத்தால் வருவேன்", "வசந்தத்தில் ஓர் நாள்" ஆகிய படங்களை தயாரித்த ரங்கராஜனின் பட நிறுவனம் ஏராளமான பொருட் செலவில் புதிய படம் ஒன்றை தயாரிக்கிறது.

இதில் பிரபு, சிலுக்குசுமிதா, ராதா நடிக்கிறார்கள். செல்வகுமார் கதை வசனம் எழுதுகிறார். மற்ற தொழில் நுட்பக் கலைஞர்கள் தேர்வு நடந்து கொண்டிருக்கிறது.

இந்த படத்தின் படப்பிடிப்பை இம்மாதம் தாய்லாந்து நாட்டின் தலைநகரான பாங்காக்கில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ—10)

உஷ்..... இது ரகசியம்

"கிள்ளாதே!" என்று நெஞ்சத்தைக் கிள்ளிய நாயகியின் பார்வை, தமிழ்ப் பட உலகை விட மலையாளப் பட உலகம் பக்கமே திரும்பி இருக்கிறதாம். "கொடுத்த கால்ஷீட்டு வீணாவதில்லை. நல்ல கதை அம்சம் கொண்ட படங்களும் கிடைக்கின்றன. பேசியபடி ஊதியமும் கிடைக்கிறது. இது போதாதா?" என்று கேட்கிறாராம். கேட்பவர் நெஞ்சத்தைக் கிள்ளும்படி!

★

ஒன்றிரண்டு படத்தில் கதாநாயகனாக நடித்தாலே தலைகால் புரியாமல் நடக்கும் திரைப்பட உலகம் இது! இந்த உலகத்தில் பல படங்களில் கதாநாயகனாக நடித்தும், அடக்கம், ஒடுக்கமாக நடந்து கொள்ளும் இரு இளம் நடிகர்களும் இருக்கிறார்கள். இவர்கள் யார் தெரியுமா? ஒருவர் நடிகர் திலகத்தின் மகன். இன்னொருவர் மறைந்த நவரச திலகத்தின் மகன்.

★

அவர் ஒரு பிரபலமான அரசியல் பிரமுகர், பட அதிபர். அவர் தயாரித்த படங்களில் சிறு வேடத்தில் நடித்தவர், ஜே. ஜே. என முழு ரூபத்துடன் "எம். ஏ." பட்டத்துக்கு உரிய பாடங்களை படித்து இந்த ஆண்டு பரீட்சையும் எழுதி இருக்கிறார். "வசந்த அழைப்புகள்" விடுத்த ஆஜானுபாகுவான இவர், பரீட்சையிலும் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

★

இந்திப் படத்தில் நடிப்பதற்காக பம்பாய் திசை நோக்கி திசை மாறிய பறவையை அழைத்துச் செல்ல விடாப்பிடியாக முயற்சி செய்கிறாராம் ஒரு தெலுங்குப் பட அதிபர். இதனால் சென்னையில் உள்ள தனது வீட்டுக்கு முன்போல நடிகை வருவது கிடையாதாம். இந்திப் பட ஆசை எந்த நடிகையைத்தான் விட்டது?

(ஐ-10)

மோட்டார் சைக்கிளில் அதுவும் ராஜீவ் அருகில் அமர்ந்து விட்டால் மேனகாவுக்கு வானத்தில் பறப்பது போலிருக்கிறது [illegible] "[illegible]" படத்தில் வருகிறது இந்தக் காட்சி.

(ஐ-10)

தேவர் பிலிம்சின் 66 ஆவது படம்

தேவர் பிலிம்ஸாரின் 66ஆவது படம் "அபூர்வ சகோதரிகள்". இந்தப் படத்தில் தேவர் பிலிம்ஸ் தயாரிப்பாளர் தண்டாயுதபாணியும், டைரக்டர் தியாகராஜனும் பல புதுமைகளைச் செய்ய இருக்கின்றனர்.

வட இந்தியாவில் புகழின் உச்சியில் இருக்கும் இசை அமைப்பாளர் "பப்பிலஹரி" அபூர்வ சகோதரிகள் படத்துக்கு இசையமைப்பது ஒரு சிறப்பு அம்சமாகும்.

பப்பிலஹரி டிஸ்கோ இசையில் மிகவும் புகழ் பெற்றவர். இதற்கென அவர் நவீன இசைக் கருவிகளை வெளிநாடுகளில் இருந்து வரவழைத்திருக்கிறார்.

தேவர் பிலிம்ஸ் படத்தில் ஊர்வசி டிஸ்கோ நடனக்காரியாக நடிக்கிறார். இப்படத்தில் 3 டிஸ்கோ நடனங்கள் இடம் பெறுகின்றன.

இவற்றுக்கென பப்பிலஹரி புதுமையான முறையில் 160 இசைக் கருவிகளை வைத்து இசை அமைக்கிறார்.

தங்களின் புதிய படமான "அபூர்வ சகோதரிகள்" பற்றி தயாரிப்பாளர் தண்டாயுதபாணியும், டைரக்டர் தியாகராஜனும் எமது நிருபரிடம் விளக்கினர்.

அப்போது இப்படத்தில் 3 சகோதரிகளாக நடிக்கும் சுஹாசினி, ராதா, ஊர்வசி ஆகியோரும், நடிகர்கள் கார்த்திக், சுரேஷ், ஜெய்சங்கர், விஜயகுமார் ஆகியோரும் வந்திருந்தனர். ஒவ்வொருவரும் தங்கள் கதாபாத்திரம் பற்றி விளக்கி கூறியது புதுமையாக இருந்தது.

தொடக்கத்தில் பிலிம் நியூஸ் ஆனந்தன் வரவேற்றார். படத்தின் புதுமையை கதாசிரியர் மாரா விளக்கினார்.

பின்னர் தியாகராஜனும், தண்டாயுதபாணியும், அபூர்வ சகோதரிகள் படத்தின் சிறப்புகளைப் பற்றி விளக்கினர்.

இப்படத்தில் ஒரு நாயும் நடிக்கிறது.

புதுமையும், இனிமையும் நிறைந்த இப்படம் அதிகப் பொருட் செலவில் பிரமாண்டமான முறையில் தயாரிக்கப்படுகிறது.

தீபாவளிக்கு படம் வெளிவரும்.

(ஐ-10)

கோடம்பாக்கம் டயரி



ஸ்டண்ட் மாஸ்டர் ஜூடோ ரத்தினத்துக்கு அவருடைய வீட்டில் இருந்து வரும் உணவு மிகமிக சத்தானதாம். சுவையானதாம். இது போன்ற விதம் விதமான, ருசியான, சத்தான உணவை சினிமா வட்டாரத்தில் கண்டதே கிடையாதாம்! இப்படி சொல்பவர், புகழ்பெற்ற மலையாள "கராத்தே" நிபுணர்.

★

"முந்தானை முடிச்சு" படத்தில் தீபாவைப் பார்த்த சில ரசிகர்கள், "உங்கள் இடை வஞ்சிக்கொடி தான்!" என்று புகழ்ந்தனராம். இதைப் பற்றியே அடிக்கடி சொல்லி, சொல்லி மகிழ்ந்து கொண்டிருக்கிறார்! உண்மையிலேயே வஞ்சிக்கொடி போன்றுதான் இருக்கிறதா?

★

"அந்தி மயக்கம்" என்ற படத்தின் [illegible] கதாநாயகன் வேடத்தில் நடித்தவர், மகேஷ். இவருக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்டு உள்ளது. [illegible] சென்னை எழும்பூரில் உள்ள நட்சத்திர ஓட்டல் ஒன்றில் தடபுடலாக நடந்தது. வருகிற டிசம்பர் மாதம் திருமணம். இது பெரியோர் முடிவு செய்த திருமணம்.

"மன்மதா என்னைத் தேடி வா" என்ற படத்தில் "சிந்"

★

என்று கால்சட்டை, ரவிக்கை அணிந்து அனுராதா நடிக்கும் காட்சி. அந்தக் காட்சியில் நடிக்கும் போது "சிந்" உடை கிழிந்தது. "சார்! 3 நிமிடத்தில் வந்து விடுகிறேன்!" என்று அந்தப் படத்தின் டைரக்டர் [illegible] மெல்ல கூறி விட்டு கிழிந்த இடத்தை மறைக்க ஓடினார், அனுராதா.

(ஐ-10)

இருவரும் இப்படி அகமும் முகமும் மலர பூத்து மகிழ்வதற்கும் தெய்வ "அனுக்கிரகம்" தேவைதானே? "அனுக்கிரகம்" படத்தில் விஜயபாரதி, ஊர்வசி.

(ஐ-10)

மதன காம மாத்திரை

— டாக்டர் சி. சொக்கலிங்கம் —

வயதாக வயதாகத்தான் மனித உடலில் பல மாற்றங்கள் ஏற்பட்டு அறிவின் முதிர்ச்சி வெளிப்படுகிறது.

நாற்பது வயதிற்குமேல் தோன்றும் மெல்லிய நரை, முகத்தில் ஒரு இளம் முதுமை ஆகியவை மனிதனின் அறிவின் முதிர்ச்சியை அழகாகக் காண்பிக்கின்றன.

ஆனால் இந்த மனித மனம் மட்டும் ஏனோ தெரியவில்லை. எப்போதும் இளமையாகவே இருக்க மாட்டோமா என ஏங்குகிறது.

கட்டுரையை மேலே தொடர நினைத்தபோதுதான் டாக்டர் அரவிந்தனின் தோளின் மேல் கையை வைத்தாள் பூமணி.

"ஆராய்ச்சியெல்லாம் எந்த அளவில் இருக்கிறது அத்தான்?" என்று கேட்டாள்.

அரவிந்தன் அவளைப் பார்த்துச் சிரித்தார். இருபத்தைந்து வயதிலும் இன்றும் பதினெட்டு வயதுக் குமரியைப் போல் இளமை குன்றாமல் தளதள வென்றிருந்தாள் பூமணி.

"உம்... ஏதோ ஓரளவு முன்னேறி இருக்கிறேன்" அரவிந்தன்.

"அப்படியா...! எங்கே கொடுங்கள். படித்துப் பார்க்கிறேன்!" என்று கூறியவாறே மேசையின் மேல் கிடந்த காகிதத்தை எடுத்து அவர் எழுதியிருந்ததைப் படித்துப் பார்த்தாள் பூமணி.

புன்னகை தவழ்ந்த அவளுடைய முகத்தில் கோபத்தின் சாயல் படர ஆரம்பித்தது.

"இளமையாக இருக்க வேண்டும் என்று நினைப்பதில் என்ன தவறு இருக்கிறது?" என்று கேட்டாள் பூமணி.

"இறைவனுடைய சிருஷ்டியின் தத்துவத்தை மாற்றியமைப்பது மனிதனின் எண்ணத்திற்கு அப்பாற்பட்டது பூமணி. அப்படியே அவரால் அதை மாற்ற முடிந்தாலும் அவன் அதைச் செய்யவே கூடாது!" என்றார் டாக்டர் அரவிந்தன்.

"ஏன் கூடாது?" என்று கேட்டாள் பூமணி. "வாழ்க்கையின் தத்துவம் பிறப்பு, இளமை, முதுமை, இறப்பு என்ற நான்கிற்குள்ளேயே அடங்கியிருக்கிறது. அதன் படியே வாழ்வதுதான் ஒரு மனிதனின் கடமை. விபத்துக்களாலும், வியாதிகளாலும் இறப்பவர்களைத் தவிர மற்ற எல்லாரும் இந்த நான்கு கட்டங்களையும் கடந்துதான் ஆக வேண்டும்" என்றார் அரவிந்தன்.

"ஏன்... எல்லாருமே இளமையாகவே இருந்து விட்டால் என்னவாம்?" என்று கேட்டாள் பூமணி.

"இறப்பும் பிறப்பும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும். அப்போது தான் இந்த உலகம் செழிப்பாக இருக்கும். பிறந்தவர்கள் அனைவரும் இறக்காமலேயே இருந்து விட்டால் இந்த உலகம் தாங்காது" என்றார் அரவிந்தன்.

"அதெல்லாமோ எனக்குத் தெரியாது. நீங்கள் உங்கள் மருத்துவ ஆராய்ச்சியை முடிக்கத்தான் வேண்டும்!" என்று தீர்க்கமாகக் கூறினாள் பூமணி.

"ஆராய்ச்சி முடியும் தறுவாயில் தான் இருக்கிறது?" என்றார் அரவிந்தன்.

"அப்படியா... அப்படியென்றால் நீங்கள் உற்பத்தி செய்யும் மதன காம மாத்திரைகளை உபயோகித்துப் பார்க்க வேண்டாமா?" என்று மகிழ்ச்சியோடு கேட்டாள் பூமணி.

"யாரிடம்......?"

பூமணி அரவிந்தனை உற்று நோக்கினாள்.

"ஆமாம் இப்போது உங்களுக்கு நாற்பத்தாறு வயதாகிறது. என்னுடைய சிநேகிதைகளெல்லாரும் நம்முடைய வயது வித்தியாசத்தைப் பார்த்து கேலி செய்கிறார்கள். அதனால் உங்களுடைய ஆராய்ச்சியின் திறன் மூலம் நீங்கள் இளமையாகி விட்டால் எனக்கு மகிழ்ச்சிதானே!" என்றாள் பூமணி.

"ஆனால் எனக்கு அதில் விருப்பம் இல்லையே" என்றார் அரவிந்தன்.

"இப்போது அப்படித்தான் சொல்வீர்கள். இளமையானதும் தான் தெரியும் அதன் அருமை!" என்று கூறிச் சிரித்தாள் பூமணி.

"அந்த நிலையையெல்லாம் நான் கடந்தவன்" என்றார் அரவிந்தன்.

டாக்டர் அரவிந்தன் மருத்துவப் படிப்பை முடித்த பின் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டு விட்டார். வியாதிகளின் காரணங்களைக் கண்டு பிடிப்பதிலும், கிருமிகளின் செயல்களைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலுமே காலத்தைச் செலவிட்டார்.

ஆரம்பத்தில் அவருக்குக் காரியதரிசியாக வந்தவள் தான் பூமணி. நாளடைவில் அவர்களிடையே காதல் அரும்பி பின்னர் திருமணத்தில் முடிந்தது.

அவர்களிடையே இருந்த நீண்ட வயது இடைவெளியைப் பற்றி பூமணி ஆரம்பத்தில் கவலைப் படவில்லை. ஆனால் நாளடைவில் அவர் தாம்பத்ய சுகத்தில் எந்த ஈடுபாட்டையும் காட்டாததைக் கண்டு அவள் துணுக்குற்றாள்.

அவரைக் காரணம் கேட்ட போது "வயதாகி விட்டது" என்று சொன்னாரே தவிர அதைப் பற்றி சிறிதும் வருத்தப் படவே இல்லை.

அந்தச் சமயத்தில் தான் இளமையின் தத்துவத்தை பற்றி ஆராய்ச்சி செய்ய முற்பட்டார் அவர்.

"உடம்பிலுள்ள நாளமில்லாச் சுரப்பிகளிலிருந்து வெளிப்படும் திரவங்களை உடல் முழுவதும் ஒரு குறிப்பிட்ட அளவு பரவ விட்டால் ஒரு மனிதன் என்றுமே இளமையாக இருக்க முடியும்" என்று எண்ணினார்.

அதைச் செயலிலும் காட்ட ஆரம்பித்தார். எலிகளையும், முயல்களையும் கொண்டு, ஆராய்ச்சியில் ஈடுபட்டார். ஒரே ஆண்டில் அதில் வெற்றியும் கண்டார்.

*

இறைவன் மேல் அளவுக்கு மீறிய பக்தி கொண்டவர் டாக்டர் அரவிந்தன்.

பிறந்தவர்கள் அனைவருமே இளைஞர்களாகவே இருக்கச் செய்வதன் மூலம் தான் இறைவனுக்கே துரோகம் செய்வதாக அவர் எண்ணினார்.

தன்னுடைய ஆராய்ச்சியின் வெற்றியினால் இந்த உலகம் ஆரம்பத்தில் ஆனந்தப் படலாம், ஆனால் அதன் பயனாக நாளடைவில் இந்த உலகத்தில் இளைஞர்களின் தொகை அதிகமாகி வேலை இல்லாத் திண்டாட்டம், பசி பட்டினிப் போராட்டம் என வரும் போது தன்னை எல்லாருமே நிந்திக்கச் செய்வார்கள் என்று எண்ணினார்.



சிறுகதை

அந்த எண்ணத்தைப் பூமணியிடம் சொன்ன போது தான் அவள் வெறுண்டாள்.

தனது ஆராய்ச்சியின் பயனாக விளைந்த மாத்திரைகளை ஒரு பாட்டிலில் போட்டு மூடி வைத்து விட்டு எழுந்தார் அரவிந்தன்.

"ஆராய்ச்சியெல்லாம் முடிந்து விட்டதா அத்தான்?" என்று கேட்டுக் கொண்டே ஆராய்ச்சி அறைக்குள் நுழைந்தாள் பூமணி.

"முடிந்து விட்டது பூமணி இதோ அந்த மாத்திரைகள்!" என்று கூறிவிட்டு அந்த மாத்திரைகள் இருந்த பாட்டிலை அவளிடம் கொடுத்தார்.

அதை வாங்கிப் பார்த்தாள் பூமணி. அவளுடைய கண்கள் மகிழ்ச்சியில் விரிந்தன.

"அத்தான். நாளைக்கே இதை உங்களுக்குக் கொடுத்துப் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். வெற்றியடைந்து விட்டால் உடனேயே அதைப் பற்றி உலகத்திற்கு அறிவிக்க வேண்டும். ஒரே வாரத்தில் நாம் கோடீஸ்வரர்களாகி விடுவோம்!" என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

"வேண்டாம் பூமணி...... எனக்கு அதில் உடன்பாடு இல்லை!" என்றார் அரவிந்தன்.

"ஏன்!" என்று கோபத்தோடு கேட்டாள் பூமணி.

"என்னுடைய ஆத்ம திருப்திக்காகத்தான் நான் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டேன். அதில் வெற்றியும் கண்டு விட்டேன். அதுவே எனக்குப் போதும்.

நாளைக்கு இந்த மாத்திரைகளை எல்லாம் அழித்துவிடப் போகிறேன்!" என்று அமைதியாகக் கூறினார் அரவிந்தன்.

"உங்களுக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?" என்று வெறுப்போடு கேட்டாள் பூமணி.

"இல்லை பூமணி. நான் நல்ல நிதானத்தோடுதான் பேசுகிறேன். இறைவனுடைய சிருஷ்டியின் தத்துவத்தை நான் மாற்றியமைக்க விரும்பவில்லை!" என்றார் அரவிந்தன்.

*

மேலும் அவர் தொடர்ந்து "அந்த மதன காம மாத்திரைகள் தொலைந்து போனது நல்லது தான். நானே அவற்றை வீசி எறிந்து விட எண்ணியிருந்தேன்" என்றார்.

மறுநாள் காலையில் ஆராய்ச்சி அறைக்குள் நுழைந்த அரவிந்தன் திடுக்கிட்டார்.

மாத்திரைகளைக் காண வில்லை!

"பூமணி......!" என்று கூப்பிட்டார்.

"என்ன அத்தான்!" என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்தாள் பூமணி.

"நேற்று இரவு தான் இந்த மேசை மேல் வைத்திருந்த மாத்திரைகளைக் காணவில்லையே...... நீ எடுத்தாயா?" என்று கேட்டார்.

"எனக்குத் தெரியாதே... நான் இப்போது தான் இந்த அறைக்குள்ளேயே நுழைகிறேன்!" என்றாள் பூமணி.

அரவிந்தன் எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தார்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

தூக்கத்தில் நடப்பவரின் விந்தை இயல்பு

விழித்திருக்கும்போது செய்யாத அபூர்வமான காரியங்களை எல்லாம் சிலர் தூக்கத்தில் செய்வார்கள்.

தூக்கத்தில் நடக்கும் பழக்கம் உள்ளவர்கள் தாம் இப்படி அபூர்வமான காரியங்களையும் தூக்கத்தில் செய்வார்கள்.

தூக்கத்தில் நடப்பது ஒரு நோய். இதை "சோம்னம்புலிஸம்" என்று ஆங்கிலத்தில் அழைப்பர். ஒரு சிக்கலான கோளாறு இது.

மனித உடல் தொடர்ந்து வளர்ச்சியும், முன்னேற்றமும் அடைந்து வருகின்ற போதிலும் பல அவசியமற்ற "மீதமிச்ச" உறுப்புக்களையும் உள் உணர்வுகளையும் இன்னமும் கொண்டுள்ளது.

எமது மூதாதையர்களான "ஆன்த்ரோபாய்ட்" குரங்குகளிலிருந்து நமது உடல் பெற்றுள்ள பரம்பரைச் சொத்துகள் அவை என்று கருதப்படுகிறது. தூக்கத்தில் நடக்கும் வியாதி கூட அத்தகைய பாரம்பரிய வெளிப்பாடு என்று உடற்கூறுயியலாளர்கள் கூறுகிறார்கள்.

தூக்கத்தில் ஏற்படும் இந்தக் கோளாறு, "ஹிஸ்டீரியா", "காக்கை வலிப்பு" போன்ற பல நோய்களுடன் சேர்ந்தே ஏற்படுவதாகத் தெரிகிறது.

இந்த நோயில் பல வகை உண்டு. சில நோயாளிகள் படுக்கையிலிருந்து எழாமலே ஏதேனும் செய்ய முயலுகின்றனர்; வேறு சிலர் சாதாரணமாக புத்திசாலிகளாக இருக்க மாட்டார்கள். ஆனால் தூக்கத்தில் படு புத்திசாலித்தனமான காரியங்களைச் செய்வார்கள். விழித்தெழுந்தவுடன் தாம் செய்தவை எதுவும் இவர்களுக்கு ஞாபகம் இருக்காது.

இன்னும் சிலர் தூக்கத்தில் எழுந்து வீட்டுக்குள் நடமாடுவர். வேறு சிலர் ஜன்னல் வழியாகக் குதித்துத் தெருவில் நடப்பார்கள். மற்றும் சிலர் விரோதமான காரியங்களையும் செய்வதுண்டு. கூரையின் விளிம்பில் நடப்பார்கள். மிக உயரமான சுவர்களை ஏறிக் குதிப்பார்கள்.

விஞ்ஞானிகள் இதற்கு என்ன விளக்கம் தருகிறார்கள்? இத்தகைய நோய் கொண்டவர்கள் தூங்கும்போது என்ன ஏற்படுகிறது?

பெரு மூளையின் சில பகுதிகள் – அதாவது உடல் இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் சில பகுதிகள் உள்ளடங்கல் நிலையிலிருந்து விடுதலை பெறுகின்றன. அதனால் மூளையின் உயர் கேந்திரங்களில் கட்டுப்பாடின்றியே தன்னிச்சையாகச் சில செயல்கள் நடைபெறுகின்றன.

தூக்கத்தில் செயல்படும் நோயாளிகளிடம் அசாதாரணமான சுறுசுறுப்பு இருப்பது பலரையும் வியப்பில் ஆழ்த்துகிறது. உயரமான கூரையின் விளிம்பில் அநாயாசமாக நடக்கிறார்கள் என்றால் அது சாதாரண விஷயமா? அவர்களுக்குத் தலை சுற்றாதா?

இங்கு இரண்டு அம்சங்களைக் கவனிக்கலாம். பல்வேறு பரிசோதனைகளை நடத்தியதன் விளைவாக இது அடிப்படையில் நமது மூதாதையர்களான மனிதக் குரங்குகளுக்குள்ள சில புராதன உள் இயக்கங்கள் வெளிப்படுவதன் காரணமாக ஏற்படுகிறது என ஒரு உடற்கூறு வல்லுனர் தெளிவு படுத்துகிறார். உதாரணமாக பெரு விரலை முன்னுக்குத் தள்ளி, பாதங்களையும் உட்புறமாகத் திருப்பி நடக்கும் முறையைக் கூறலாம்.

எஸ், ஏ. நவாஸ்

தூக்கத்தில் நடக்கும் எவரையும் எழுப்பக் கூடாது. அவர் போக்கில் விட்டுவிடவும் கூடாது. மாறாக அமைதியாக அவரது கையைப் பிடித்து அவருடைய அறைக்குக் கூட்டிச் செல்ல வேண்டும்.

பெரும்பாலும் குழந்தைப் பருவத்தில்தான் இந்த நோய் ஏற்படுகிறது. பலருக்கு பிற்காலத்தில் எவ்விதச் சுவடுமின்றி இது தானாகவே மறைந்து விடுகிறது.

இந்த நோய்க்கு மருந்துகளை விட வரையறுக்கப்பட்ட பழக்க வழக்கங்கள்தாம் சரியான சிகிச்சை முறை என்று உடற்கூறு மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

தூக்கத்தில் நடக்கும் வியாதி உடையவர்களுக்கு நிரந்தர வாழ்க்கையை திட்டவட்டமாக வரையறுத்துக் கொடுக்க வேண்டும். படிப்பதற்கும், விளையாடுவதற்கும், உண்பதற்கும், உறங்குவதற்கும் சரியான நேரசூசி ஒன்றை அமைத்து அதை அவர்கள் பின்பற்றுமாறு செய்ய வேண்டும். தகுந்த உடற் பயிற்சிகளுடன் அவர்களது நரம்பு மண்டலம் முறுக்கேறுவதற்கு சில "டொனிக்"குகளும் கொடுக்க வேண்டும்.

சொர்க்கத்தில் ஒரு நாவிதன் தேவை

சின்னஞ் சிறு கதை

சீதிய நாட்டைச் சிற்றரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு அறிவில் சிறந்தவர் ஒருவர் அமைச்சராக இருந்தார்.

அரண்மனையில் அரசனுக்குத் தனியாக ஒரு நாவிதன் உண்டு. அந்த நாவிதனுக்கு அரசனிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அதிகமாகையால் அரசனிடம் செல்வாக்கும் அதிகம். அமைச்சரை ஒழித்துக் கட்டி விட்டுத் தான் அப்பதவிக்கு வரச் சூழ்ச்சி செய்தான் அவன்.

ஒரு நல்ல தருணத்தில் நாவிதன் அரசனிடம் வந்து, "அரசே! தாங்கள் பலவிதமான இன்பங்களையும் அனுபவித்துக் கொண்டு இங்கே சுகமாக இருக்கிறீர்கள். ஆனால், இறந்து போன உங்களுடைய பெற்றோர்கள் மேலுலகத்தில் எப்படி இருக்கிறார்களோ? நம்முடைய அமைச்சரை மேலுலகத்திற்குச் சென்று பார்த்து வரச் சொல்லுங்களேன். நமது அமைச்சர் கெட்டிக்காரர். மேலுலகம் சென்று வந்து விடுவார்", என்றான்.

இறந்து போன தன்னுடைய பெற்றோர்கள் மீது அரசனுக்குப் பிரியம் அதிகம். எனவே, நாவிதன் பேச்சைக் கேட்டதும் அமைச்சரை அழைத்து மேலுலகில் இருக்கும் தனது பெற்றோர்களைக் கண்டு வரும்படி ஆணையிட்டான்.

தன்னுடைய ரகசிய ஒற்றன் மூலம் நாவிதனுடைய சதியை முன்கூட்டியே புரிந்து கொண்டிருந்தார் அமைச்சர்.

மறுநாள் மேலுலகம் செல்வதற்காக அமைச்சரை மயானத்தில் ஒரு குழியில் போட்டுப் புதைத்தார்கள்.

குழியிலிருந்து ஒரு சுரங்கப் பாதை அமைத்து மயானத்திற்கு வெளியே வந்து சேர ஒற்றன் மூலம் ரகசியமாக ஏற்பாடு செய்திருந்தார் அமைச்சர்.

அந்தச் சுரங்க வழியாகத் தப்பிச் சென்று மூன்று மாதங்கள் தலை மறைவாக இருந்தார்.

பிறகு ஒருநாள் நீண்ட தாடி மீசையோடு அரசனிடம் வந்தார். அரசன் ஆவலாக, "என்னுடைய பெற்றோர்களைப் பார்த்தீர்களா, அமைச்சரே?" என்று கேட்டான்.

உடனே அமைச்சர், "அரசே! தங்களுடைய மூதாதையர்கள் அனைவரும் சொர்க்கத்தில் நலமாக இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஒரே ஒரு குறை! சொர்க்கத்தில் நாவிதனே இல்லை. மூன்று மாதங்களுக்குள்ளாகவே எனக்கு இவ்வளவு பெரியதாகத் தாடி வளர்ந்திருக்கிறது என்றால், வெகு காலமாக அங்குள்ள அவர்களுக்கு எவ்வளவு பெரியதாகத் தாடி வளர்ந்திருக்கும் என்று எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்களேன்! அதனால், நமது அரண்மனை நாவிதனை அனுப்பி வைக்கும்படி என்னிடம் சொன்னார்கள்", என்றார்.

உடனே அரசன், அமைச்சரை அனுப்பியது போல் நாவிதனைக் குழியில் போட்டுப் புதைத்து மேலுலகம் அனுப்புமாறு கட்டளையிட்டான்.

— சின்ன அண்ணாமலை சொன்ன கதை.

ஜோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி

[4. 9. 1983 தொடக்கம் 10. 9. 1983 வரையுள்ள பலாபலன்கள்]

மேஷம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்.

மேடம்:- அமைதிக் குறைவு, காதல் விவகாரங்களில் மனக் கவலை, வீண் அலைச்சல் முதலியன உண்டு. நண்பர்கள் உதவி செய்வார்கள். மனைவி வழியில் ஒரு சுப காரியம் நடக்கும். பொருளாதாரம் நன்றாக இருக்கும். தேகாரோக்கியம் அபிவிருத்தியடையும். பிள்ளைகளால் மனப்பயம் குறையும்.

ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4ஆம் கால்கள். ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் கால்கள்.

ரிஷபம்:- மனதில் ஏற்பட்ட பயம் குறைந்து மனத் தெம்பு ஏற்படும். கோர்ட் விவகாரங்கள் நன்மையாக முடியும். சில விஷயங்களில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தின் ஒற்றுமை நிலவும். செலவினங்கள் அதிகரித்த போதிலும் கட்டுக்கடங்கி இருக்கும். புதிய நண்பர்கள் சேர்வார்கள்.

மிதுனம்

மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3ஆம் கால்கள்.

மிதுனம்:- ஆரோக்கியம், புகழ், கௌரவம் நன்றாக இருக்கும், ஆயினும் மன அமைதி இராது. தந்தை வழியில் ஒரு துக்க செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் கவலை ஏற்படும். பணப் புழக்கம் நன்றாக இருக்கும். நண்பர்கள் உதவி செய்வார்கள். கடன் தொல்லை இல்லை. புதிய திட்டம் ஒன்றுக்கு அடி போடப்படும்.

கடகம்

புனர்பூசம் 4ஆம் கால், பூசம், ஆயிலியம்.

கடகம்:- செளகரியங்கள் முன்னைவிட நன்றாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் சீராக நடைபெறும். அரசியல் ஈடுபாடுடையவர்கள் அனுகூலமடைவார்கள். வீடு, நிலம், வாகனம் போன்றவற்றால் செலவினங்கள் அதிகரிக்கும். தூர தேசத்தில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும். கணவன் மனைவி உறவு மகிழ்ச்சி உடையதாக இருக்கும்.

சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1ஆம் கால்.

சிங்கம்:- பணப் புழக்கம் நன்றாக இருக்கும். இருந்து வந்த மனக் கவலைகள் படிப்படியாக நீங்கும். செலவினங்கள் கட்டுக்கடங்கி இருக்கும். இழந்த சில பொருட்கள் கிடைக்கும். புதிய பொருட்கள் வந்து சேரும். பிள்ளைகளால் மன நிம்மதி ஏற்படும். சயன, போஜன சுகம் அதிகரிக்கும். உறவினர் பெரிதும் உதவுவர்.

கன்னி

உத்தரம் 2, 3, 4ஆம் கால்கள். அத்தம், சித்திரை 1ஆம், 2ஆம் கால்கள்.

கன்னி:- கல்வியுடன் சம்பந்தமுடைய தொழில் புரிவோர் கவலையடைவார்கள். மாணவர்களுக்குக் கஷ்டம், வழக்கு விவகாரங்கள் தொந்தரவு தரும். அயலவரோடு வாய்த் தர்க்கம் ஏற்பட இடமுண்டு. பொறுமையுடன் பழகுவது நல்லது. தூர தேசப் பிரயாணம் ஒன்றுக்கு அடிபோடப்படும். பிள்ளைகளால் கவலை ஏற்பட இடமுண்டு.

துலாம்

சித்திரை 3, 4 ஆம் கால்கள் சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள்.

துலாம்:- தொழிலில் அபிவிருத்தி காணப்படும். உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். நண்பர்கள் தாமாக முன் வந்து உதவுவார்கள். எதிர்பாராத வகையில் பணம் புரளும். கொடுக்கல் வாங்கல் பூரண திருப்தியைத் தரும். தோட்டத் தொழிலாளிகள் அதிக ஆதாயம் அடைவார்கள். சளிரோகம் ஏற்பட இடமுண்டு.

விருச்சிகம்

விசாகம் 4ஆம் கால் அனுஷம், கேட்டை.

விருச்சிகம்:- வியாபாரம் பாதிக்கப்படும். கடன் கொடுத்தால் திரும்பி வாராது. வாகனத்தால் செலவு அல்லது விபத்து ஏற்பட இடமுண்டு. பிள்ளைகளால் மனக்கவலை ஏற்படும். செலவினங்கள் அதிகரிக்கும். மனைவியின் அன்பு ஆறுதல் தரும். புதிய நண்பர்கள் சேர்வார்கள். நண்பர் ஒருவர் மூலம் புதிய திட்டம் ஒன்று உருவாகும்.

தனு

மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் கால்.

தனுசு:- இவ்வாரம் வாழ்க்கை நன்றாக அமையும். கௌரவம், தேகாரோக்கியம், புகழ் உயர்வடையும். ஆயினும் மனச் சோர்வும், சஞ்சலமும் ஏற்படும். செலவினங்கள் கட்டுக்கடங்கி இருக்கும். கொடுக்கல் வாங்கல் சீராக நடைபெறும். கோர்ட் வழக்குப் போன்றவைகள் புதிதாக ஏற்பட இடமுண்டு. தாய் வழியில் ஒரு சுப காரியம் நடக்கும்.

மகரம்

உத்திராடம் 2, 3, 4ஆம் கால்கள். திருவோணம், அவிட்டம் 1, 2ஆம் கால்கள்.

மகரம்:- உத்தியோகம் பார்க்குமிடத்தில் சிறு சிறு தொல்லைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு ஒன்றும் இராது. இடமாற்றம் அல்லது பிரயாணம் ஒன்றுக்கு இடமுண்டு. மனைவி வழியால் திடீர்ச் செலவுக்கு இடம் ஏற்படும். தூரதேசத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கும். வாரக் கடைசியில் தேகாரோக்கியம் சிறிது பாதிக்கப்படலாம். கவலைக்கு இடமில்லை.

கும்பம்

அவிட்டம் 3, 4ஆம் கால்கள். பூரட்டாதி, சதயம் 1, 2, 3ஆம் கால்கள்

கும்பம்:- கஷ்டங்கள் இவ்வாரம் படிப்படியாக அகலும். சுய நம்பிக்கையுடனும், மனத் துணிவுடனும் கருமம் ஆற்றினால் நல்ல பலன் கிடைக்கும். தேகாரோக்கியம் மேன்மையடையும். வீடு, நிலம், வாகனம் போன்றவற்றால் செலவினங்கள் அதிகரிக்கும். அயலவருடன் சிறு தகராறு தோன்ற இடமுண்டு. பொறுமையைக் காப்பது நல்லது.

மீனம்

பூரட்டாதி 4ஆம் கால் உத்தரட்டாதி, ரேவதி.

மீனம்:- உத்தியோகஸ்தர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். வீண் அலைச்சல், அகால போசனம், நித்திரையின்மை போன்றவற்றிற்கு இடமுண்டு. தாம்பத்திய வாழ்க்கையில் பிறரால் இடைஞ்சல் ஏற்படும். மாணவர்களுக்கு [illegible], எதிர்வரும் சுபகாரியம் ஒன்றுக்குத் திட்டம் அமையும்.

குழந்தை பார்வையிழக்க காரணம் என்ன ?

உணவில் போதுமான அளவு விட்டமின் "ஏ" கிடைக்கப் பெறாத குழந்தைகளே

— ரஷீட் நூருல் ஆயின் —

பார்வை இழக்க நேரிடுகிறது. குறிப்பாக ஒரு வயது முதல் ஐந்து வயது வரையான குழந்தைகள் தாம், பெரும்பாலும் விட்டமின் "ஏ" பற்றுக் குறை காரணமாக பார்வை இழக்கின்றன.

நம்நாட்டு மக்கள் பெரும்பாலும் அரிசியையே உணவாக உட்கொள்கிறார்கள். ஆனால் இதில் போதுமான அளவு உயிர்சத்து "ஏ" கிடைப்பதில்லை.

விட்டமின் "ஏ" பற்றுக் குறை உள்ள ஒரு குழந்தைக்கு கொஞ்சம் கொஞ்சமாக பார்வை மங்குகிறது.

ஆரம்பத்தில் குழந்தையிடம் விட்டமின் "ஏ" பற்றுக்குறைக் கான அறிகுறிகள் தென்படும் போது சிகிச்சை மேற்கொண்டால் எளிதில் குணப்படுத்தி விடலாம்.

மங்கலான வெளிச்சத்தில் ஒரு குழந்தையினால் நன்கு பார்க்க முடியவில்லையென்றால், அந்தக் குழந்தைக்கு மாலைக் கண் நோய் பீடித்திருக்கிறது எனலாம்.

விட்டமின் "ஏ" பற்றுக் குறையினால் முதற்படியாக குழந்தை பாதிக்கப்படுவது இந்த நோயினால் தான்.

ஒரு குழந்தையின் கண் விழிப் படலம் சோர்ந்து ஒளியிழந்து மந்தமாகவும், உலர்ந்தும் காணப்படுவது விட்டமின் "ஏ" பற்றுக்குறையினால் உண்டாவதே ஆகும். இதனைத் தொடர்ந்து குழந்தையின் கண்களில் படிப்படியாக ஒளிகுன்றி பின் முடிவாக அது பார்வை இழந்து விடுகின்றது. இதனை "கெராடோ மலாசியா" என்று அழைக்கிறார்கள்.

விட்டமின் "ஏ" பற்றுக் குறைவை ஊட்டச்சத்துடைய உணவின் மூலம் குணப்படுத்தி விடலாம். சில உணவுகளில் விட்டமின் "ஏ" ஏராளமாக அடங்கியுள்ளன.

உதாரணமாக பால், முட்டை, நெய், மீன் எண்ணெய் போன்றவற்றில் விட்டமின் "ஏ" தாராளமாக உண்டு. இத்தகைய உணவுப் பொருட்களை குழந்தைக்குப் புகட்டினால் கண் பார்வையில் பழுது ஏற்பட மாட்டாது.

வெந்தயக் கீரை, கரட், பப்பாளிப்பழம், மாம்பழம் போன்றவற்றிலும் நிறைய உயிர்ச் சத்துக்கள் உள்ளன. இவற்றை குழந்தைகளுக்கு உண்ணக் கொடுக்கலாம். இதன் மூலம் குழந்தை உயிர்ச்சத்தைப் பெற வழி வகுக்கலாம்.

மற்றுமொரு வழியிலும் குழந்தையின் கண்களை நாம் பாதுகாக்க முடியும். அதாவது விட்டமின் "ஏ" சத்து நிறைந்த மாத்திரைகள் மூலமும் குழந்தையின் கண் பார்வையை பிரகாசமடையச் செய்யலாம்.

எது எவ்வாறாயினும், சேயின் உடல் நல பேணலில் தாயின் பராமரிப்பு இன்றியமையாத ஒன்றே. இதனை உணர்ந்து ஒவ்வொரு அன்னையரும் செயற்பட்டால் குழந்தை நலமுடன் வாழ வழி பிறக்கும் அல்லவா?

(ஐ)

விளையாட்டுப் பொருட்களும் விபரீதமாகலாம்!

குழந்தைகள் மீது நாம் கொண்டுள்ள அன்பின் காரணமாக விதம் விதமான விளையாட்டுப் பொருட்களை நாம் வாங்கிக் கொடுக்கிறோம்.

பாதுகாப்பற்ற விளையாட்டுப் பொருட்கள் குழந்தைகளின் உயிருக்கே எமனாகலாம் என்பதையும் நாம் ஒரு கணம் உணர்தல் நன்று.

வெளிநாட்டில் தொழில் புரியச் செல்பவர்கள் திரும்பி வரும் போது தங்கள் குழந்தைகளுக்கு விநோதமான விளையாட்டுப் பொருட்களைக் கொண்டு வருகின்றனர்.

எலக்ரோனிக், மின்சாரம் ஆகியவற்றால் இயங்கும் விளையாட்டுப் பொருட்களை சிறுவர்களிடம் கொடுத்து ஆனந்தப் படுகிறார்கள், பூரிப்படைகிறார்கள்.

ஆனால் இவற்றால் குழந்தை ஆபத்தை எதிர்நோக்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம் என்பதை ஏனோ அவர்கள் சிந்திப்பதில்லை.

ஒழுங்கான முறையில் எலக்ரோனிக், மின்சார விளையாட்டுப் பொருட்களை இயக்காத போது எதிர்பாராத விபத்துக்கள் நேர இடமுண்டு. இந்த விடயத்தில் அன்னையரே கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

கூர்மையான முனைகள் உடைய விளையாட்டுப் பொருட்களை குழந்தைகளுக்குக் கொடுப்பதும் ஆபத்தானதே.

இதனால் குழந்தைக்கு ஆபத்து ஏற்படும் என்பது ஒரு புறம் இருந்தாலும் கூடி விளையாடும் ஏனைய குழந்தைகளுக்கும் இதனால் எதிர்பாராத காயங்கள் ஏற்படும் என்பதை மறந்து விடலாகாது.

விளையாட்டின் போதே அறிவையும் வளர்த்து விடக்கூடிய விளையாட்டுப் பொருட்களும் எவ்வளவோ உள்ளன.

ஆபத்தை விளைவிக்கும் விளையாட்டுப் பொருட்களுக்குப் பதிலாக, இவற்றையே தம் பிள்ளைகளுக்குப் பெற்றோர் வாங்கிக் கொடுப்பது சிறந்தது தானே?

(ஐ)

— ஸுல்பிகா தாஜுத்தீன் —

மாதர் மஞ்சரி

தயாரிப்பு: சுந்தரி

மதன காம மாத்திரை...

மாத்திரைகளைக் காணவில்லை.

"இரவில் பூனை ஏதாவது அதைக் கீழே தள்ளி விட்டிருக்கும். காலையில் வேலைக்காரி அவற்றைக் கூட்டி வெளியே எறிந்திருப்பாள் என்று நினைக்கிறேன்!" என்றாள் பூமணி.

"அப்படியும் இருக்கலாம்" என்றார் அரவிந்தன்.

சமையல் அறைக்குச் சென்ற பூமணி தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள்.

சமையலறையில் ஒரு மூலையில் ஒளித்து வைத்திருந்த அந்த மாத்திரைகள் அடங்கிய பாட்டிலை வெளியே எடுத்தாள். ஒரு மாத்திரையைக் காப்பியில் போட்டுக் கலந்தாள்.

பிறகு அந்தக் காப்பியைக் கொண்டு போய் அரவிந்தனிடம் கொடுத்தாள்.

ஐந்து நாட்கள் தொடர்ந்து அவ்வாறே செய்தாள் பூமணி.

ஆறாம் நாள் இரவு!

நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்த பூமணி தன் மேல் ஏதோ ஊர்வது உணர்ந்து கண் விழித்தாள்.

அரவிந்தன் தான் அவளருகே அமர்ந்து கொண்டு அவளுடைய கன்னத்தைத் தடவி விட்டுக் கொண்டிருந்தார்.

பூமணி ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தாள்.

"அத்தான், இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்!" என்று கேட்டாள்.

"எனக்கே புரியவில்லை பூமணி. நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த நான் திடீரென்று விழித்துக் கொண்டேன். உடனேயே உன்னைப் பார்க்க வேண்டும்... உன்னைத் தழுவ வேண்டும் என்று என் மனம் துடித்தது. அதனால் தான் இங்கே வந்தேன்!" என்றார் அரவிந்தன்.

"அப்படியா அத்தான்!" என்றவள் எழுந்து உட்கார்ந்து அவரைக் கட்டிப் பிடித்தவாறே மீண்டும் படுக்கையில் சாய்ந்தாள்.

பகலில் காய்ந்த வெயிலினால் அந்த இரவு ஒரே புழுக்கமாக இருந்த போது அந்த அறைக்குள் மட்டும் பூமணியின் உள்ளம் அரவிந்தன் எனும் இன்ப மழையால் குளிர வைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

*

மறுநாள் காலையில் "உங்களிடம் இப்போது நிறைய இளமை தென்படுகிறது அத்தான்!" என்றாள் பூமணி நமட்டுச் சிரிப்புடன்.

இளமையில் பூரித்த பூமணியை இன்ப ஆசைகள் விட்டு வைக்கவில்லை. ஆசை பேராசையாகி, பெரு நெருப்பாகியது.

"ஒரு நாளைக்கு ஒரு மாத்திரையைக் கொடுத்தபோதே ஐந்து நாட்களுக்குள் இவ்வளவு மாறி விட்டாரே...... அதையே மூன்று மாத்திரைகளாகக் கொடுத்தால் எவ்வளவு சீக்கிரம் இளமையாகி விடுவார்! இன்னும் எவ்வளவு கொள்ளை இன்பம் அனுபவிக்கலாம்......" என்று எண்ணியது அவளுடைய மனம்.

அன்றே அதைச் செயலிலும் காட்ட ஆரம்பித்தாள்.

ஐந்து நாட்கள் சென்றன.

ஆறாம் நாள் இரவு.

படுப்பதற்காக வந்த பூமணியை இறுக்கமாகக் கட்டிப் பிடித்தார் அரவிந்தன். அந்தப் பிடியில் மூச்சுத் திணறிப் போனாள் பூமணி.

"சே......! என்ன இப்படி மிருகத்தனமாக நடந்துகொள்கிறீர்கள்......!" என்று கேட்டவாறே அவரை நோக்கித் திரும்பிய பூமணி "வீல்" என்று கத்திக் கொண்டே அவருடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு படுக்கையில் போய் விழுந்தாள்.

டாக்டர் அரவிந்தனின் கண்கள் இரத்தச் சிவப்பாக மாறி இருந்தன. அவருடைய முகத்தில் பயங்கரம் குடிகொண்டிருந்தது.

அவர் அவளை நோக்கி மெல்ல படுக்கையருகே நெருங்கினார். என்ன செய்வதென்று தெரியாமல் பயந்தவாறே படுத்திருந்தாள் பூமணி.

அவளை நோக்கிக் குனிந்த அரவிந்தன் தன்னுடைய கைகளினால் அவளுடைய கழுத்தை நெரிக்க முற்பட்டார்.

"ஐயோ அத்தான்...! என்னை மன்னித்து விடுங்கள்!" என்று கத்தினாள் பூமணி.

அவளுடைய கழுத்திலிருந்து கைகளை விடுவித்துக் கொண்டு அவளை உற்று நோக்கினார் அரவிந்தன்.

"என்ன சொல்கிறாய் நீ?" என்று பயங்கரமான குரலில் கேட்டார்.

நடந்தவற்றை எல்லாம் நடுங்கித் திணறிக் கூறி முடித்தாள் பூமணி.

ஆத்திரத்தில் அரவிந்தனின் முகம் மேலும் சிவந்தது.

"அடிப் பாவி! அந்த மாத்திரைகளின் தன்மை தெரியாமல் விளையாடி விட்டாயே. கூடுதலாக ஒரு மாத்திரையைச் சாப்பிட்டாலும் நிலைமையே மாறிவிடும். பிறகு அதன் விளைவுகளை மாற்றவே முடியாது!" என்று கூறியவாறே அவளுடைய கழுத்தை மீண்டும் நெரிக்க ஆரம்பித்தார்.

"யாரையாவது கொன்றால் தான் என் மனம் சாந்தியடையும். அப்போது தான் அந்த மாத்திரைகளின் விளைவும் குறையும்!" என்று அலறியது அரவிந்தன் என்ற அந்த மனித மிருகம்.

"இந்த நேரத்தில் என் வெறிக்கு வேண்டியது ஓர் உயிர். அவ்வளவுதான் அது யாராக இருந்தாலும் எனக்குக் கவலை இல்லை!" என்று கூறிவிட்டு அவளைக் கட்டித் தழுவியது!!

அவ்வளவுதான்!

பூமணி இறந்து விட்டாள்!

மறுகணம் அந்த மனித மிருகம் ஒரு கத்தியைக் கையிலெடுத்துத் தன் நெஞ்சில் தானே புகுத்திக் கொண்டு சுருண்டு விழுந்தது!

மதன காம மாத்திரையின் உற்பத்தி இரகசியமும் அத்தோடு அழிந்தது.

வயதாவதைப் பற்றி கவலைப்படாத நடிகை

பிரபல இத்தாலிய நடிகை சோபியா லோரனுக்கு வயதாவதைப் பற்றி கவலை இல்லையாம்.

சோபியா லோரனுக்கு இப்போது 50 வயது ஆகிறது.

இவ்வளவு வயது ஆகி விட்டதாக தாம் உணரவே இல்லை என்று அவர் ஒரு பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

என் வயதை ஒத்த பெண்கள் தமக்கு வயதாகி விட்டதே என்று கவலைப்படுகிறார்கள். அவர்களுடைய கவலையைப் பார்க்கும் போது எனக்கு வியப்பாக இருக்கிறது.

நேப்பிள்ஸ் நகர குடிசைப் பகுதியில் வளர்ந்தவள் நான். பிறக்கும் போதே முதுமையுடன் பிறந்தேன்.

15 வயது முதல் படத்தில் நடிக்கிறேன். சிறுமியாக ஒரு போதும் நடித்ததில்லை. பெண்ணாகத்தான் நடித்து வருகிறேன்.

என் வாழ்க்கை விநோதமாக இருந்ததால்தான் நான் இப்போது திடகாத்திரமாக இருக்கிறேன். ஒருவேளை நான் அதிர்ஷ்டசாலியாகவும் இருக்கலாம்.

ஆனால், இந்த நிலையை அடைவதற்கு நான் கடுமையாக உழைத்திருக்கிறேன்.

இன்பம் என்றால் குடும்பம் அல்லது பாதுகாப்பு என்று கருதி வந்தேன். ஆனால், சுதந்திரம்தான் இன்பம் என்பதை இப்போது உணர்கிறேன்.

நடிப்புத் தொழிலை விட்டு ஓய்வு பெறுவது பற்றி நான் இதுவரை சிந்திக்கவில்லை. என் தொழிலை நான் மிகவும் நேசிக்கிறேன்.

இப்படி சோபியா லோரன் சொன்னார். (ர)

சோவியத் ரஷ்யாவில் சகஜமாகி விட்ட விவாகரத்து!

சோவியத் ரஷ்யாவில் நடைபெறும் ஒவ்வொரு மூன்று திருமணங்களிலும் ஒன்றாவது விவாகரத்தில் முடிவது என்பது சகஜநிலையாகி விட்டது.

திருமணத்தைப் பொறுத்தவரை இது ஒரு தலைவிதி தானா என்று சமூகவியலாளர் ஒருவர் வினா எழுப்பி இருக்கிறார்.

"குடும்ப வாழ்வின் மகத்துவம் குறித்தும், அதன் பெறுமதி குறித்தும் மக்கள் அறிய வேண்டும். அதிகரித்து வரும் விவாகரத்து எண்ணிக்கையைக் குறைப்பதற்கு இதுவே ஏற்றது".

சோவியத் ரஷ்யாவின் சமூகவியலாளரான யூரி யுரிகோவ், "பிராவ்தா" பத்திரிகையில் இவ்வாறு கருத்து தெரிவித்திருக்கிறார்.

ரஷ்யாவில் வருடாந்தம் நடைபெறும் திருமணங்களின் எண்ணிக்கை 26—28 லட்சமாகும், அங்கு சனத்தொகை 27 கோடி ஆகும். ஆனால் அங்கு வருடாந்தம் 9,50,000 விவாகரத்துக்கள் நடக்கின்றன.

விவாகரத்துக்கள் அநேகரைத் தனிமையில் வாடவும் வைத்துள்ளன.

குடும்ப வாழ்க்கையானது, மகிழ்ச்சியும், அமைதியும் மிக்கதாக இருக்க வேண்டும். ஆண்களும், பெண்களும் குடும்ப வாழ்வில் சமபங்கை ஏற்க வேண்டும். இதுபற்றி இளம் பருவத்திலிருந்தே நல்ல முறையில் அறிவூட்டப்பட வேண்டும் என்று யூரி யுரிகோவ் மேலும் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

(ஐ)

நெற்றியின் அமைப்பு எப்படி?

பெண்களின் குணங்கள், நல்லறிவு, நல் நடத்தை, நற்பண்புகள், நல் அதிர்ஷ்டம், இவைகளை, அவர்களின் அங்க அமைப்புகளைக் கொண்டு நாம் தெரிந்து கொள்ளலாம்.

நமது அறிஞர் பெருமக்கள், நமக்கு "சாமுத்திரிகா லட்சணம்" என்ற அங்க அமைப்பு குறிப்புகளை ஆராய்ச்சி செய்து இதற்கென எழுதி வைத்துள்ளனர்.

அதன்படி, நெற்றி, கண்கள் புருவம், தாடைகள், மூக்கு பற்கள், கழுத்து, கைகள், விரல்கள், மார்பு, வயிறு, பிட்டம், கால்கள் என எல்லா அங்கங்களைப் பற்றியும் 32 லட்சணங்கள் உள்ளனவாம்.

ஒவ்வொரு அங்க அமைப்புக்கும் அதற்கேற்ப பலன்கள் தன்மைகள் உண்டாம்.

அகன்ற, நடுத்தர, குறுகிய, நெற்றி எனப் பல அமைப்புக்கள் உண்டு.

(1) அகன்ற நெற்றி அமைந்த பெண்கள் கம்பீரமாக, அன்பாலும், ஆதரவாலும், அரவணைப்பாலும், மரியாதை, செல்வாக்கு, கௌரவம் பெற்று மற்றவர்களைக் கவர்ந்து எதிலும் முன்னணியில் நிற்கும் நற்பண்பாளர்கள்.

(2) அகன்றும் குறுகியும் இன்றி நடுத்தர அமைப்பு அமைந்த பெண்கள் தங்கள் காரியத்தில் கவனமாகவும், நேர்மையும், மேலோர், அதிகாரிகள், குழந்தைகள், பெரியவர்கள் அன்பையும் ஆதரவையும் பெற்று உதவிகள் பெறுவதிலும், உதவிகள் செய்வதிலும் திறமைபெற்ற நற்சிந்தனையாளர்கள்.

(3) குறுகிய நெற்றி அமைந்த பெண்கள், சொந்த நாட்டிலும் எந்த வேலையிலும் கட்டுப்பட்டுச் செய்வதிலும் மற்றவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதிலும் பிறரால் வழிநடத்திச் செல்லும் தன்மையும் பெற்று தங்கள் உழைப்பில் முன்னணியில் நிற்கும் உறுதியாளர்கள்.

(ஐ)

தாய்லாந்து நாட்டு தாயின் தாராள குணம்

தாய்ப்பால் கொடுத்தால் தங்கள் மார்பழகு குன்றிடுமே; எடுப்பான தோற்றம் மாறிடுமே என அஞ்சும் வஞ்சியர்கள் இக்காலத்தில் ஏராளம்.

சாயுவ் என்னும் பெயர் கொண்ட 47 வயதுத் தாய்லாந்து நாட்டுத் தாயொருத்தி இதற்கு விதிவிலக்கானவள்.

தான் பெற்ற குழந்தைகளுக்கு, தன் தனத்திலிருந்து சுரக்கும் தாய்ப்பாலை மேலும் அதிகரிப்பதற்காக நாட்டு மூலிகை ஒன்றைச் சாப்பிட்டாள் சாயுவ்.

மூலிகையோ சதி செய்தது! அதன் சக்தி முலைகள் இரண்டை மேலதிகமாக அவள் மார்பில் முளைக்கச் செய்தது.

நான்கு மார்பகங்களுடன் இயல்பாக நிற்கவோ, நடமாடவோ முடியாத அந்தத் தாய் மருத்துவ உதவியை நாடினள்.

டாக்டர்கள் "எக்ஸ்ரா" மார்பகங்கள் இரண்டையும் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி விட்டார்கள்.

ஏழு பிள்ளைகளின் தாயான இவள் தன் மார்பகங்களின் எழிலை எண்ணிப் பார்க்கவில்லை.

தாயானவுடனேயே பால் சுரக்கும் தன் தனங்களை, தான் பெற்ற குழந்தைகளுக்குத் தானமாக்கினாள்.

அதுமட்டுமன்றி, சுரக்கும் பாலை அதிகரிக்க எண்ணி மூலிகையையும் சாப்பிடத் தயங்கவில்லையே!

இவளைத் தாயாகப் பெற்ற இவளது செல்வங்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள் தான்! (ஐ)

புன்னகை புரிவதும் பாவமோ?

ஒரு பெண்ணின் புன்னகை சில சமயங்களில் கலகத்தையே உண்டாக்க இடமுண்டு. இதோ ஒரு சம்பவம்:

துருக்கியில் உள்ள இஸ்தான்புல் என்ற நகரத்தில் மதுச்சாலை ஒன்றுக்குள் நுழைந்த 18 வயதுப் பருவ அழகி ஒருத்தி உதிர்த்த புன்னகை அங்கிருந்த நான்கு ஆண்களுக்கிடையில் பெரும் ரகளையை மூட்டிவிட்டது.

அவர்களில் ஒவ்வொருவரும் அவள் தன்னைப் பார்த்தே புன்னகைத்ததாகக் கூறி வாதித்துக் கொண்டனர்.

விவாதம் கைகலப்பில் முடிவடைந்து நால்வரும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

அவர்கள் எப்பருவத்தினர், என்று நினைக்கிறீர்கள்?

ஒருவருக்கு வயது 81, மற்றவருக்கு 82 வயது, மூன்றாமவருக்கு 63 வயது, அடுத்தவருடைய வயது 95.

பெண்ணின் புன்னகை வலிமையைப் பார்த்தீர்களா? (ஐ)

preethi
ப்ரீதி பிரீதி
3 கொண்ட பக்கெற் ரூ. 1.00
இடைவெளி விட்டுக் குழந்தை பெற வழி...
'பிரீதி'
பாதுகாப்பான,
நிச்சயமான,
எளிமையான
குடும்பத் திட்ட வழி
ஸ்ரீ லங்கா
குடும்பத்திட்டச் சங்கம்

சிந்தாமணி
CHINTAMANI தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு சிந்தாமணி
චින්තාමණී

5 ஆண்டுகளில் 62 கணவன்மார்

1922 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் 24 வயதுடைய திருமதி. திரேசா வோகன் என்ற இளம் யுவதி இங்கிலாந்து நீதிமன்றம் ஒன்றின் முன் நிறுத்தப்பட்டாள்.

தன்னுடைய முதற் கணவனை விவாகரத்து செய்யாமல் மற்றொருவரை திருமணம் செய்ததற்காக - அவர் மீது இருதார மணம் புரிந்த குற்றம் சுமத்தப்பட்டது.

விசாரணை நடந்த போது ஒரு அதிர்ச்சித் தகவல் வெளியானது.

திரேசா தனது முதல் கணவனை திருமணம் செய்த பின்னர் விவாகரத்து செய்யாமலேயே ஐந்து வருட காலத்திற்குள் அறுபத்தியொரு (61) பேரைத் திருமணம் செய்து கொண்டதாக நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டார்.

இங்கிலாந்து, ஜேர்மனி, தென் ஆபிரிக்கா உட்பட பல இடங்களில் தனக்கு பல கணவன்மார் இருப்பதை அவள் நீதிமன்றத்தில் வெளிப்படுத்தினாள்.

இப்படி ஒரு மனைவியா?

(ர-6)

புதைகுழி கிடைக்காமல் சடலங்கள் தவிக்கின்றன

கல்லறை கட்ட ரூ. 6 லட்சம் தேவை ஹொங்கொங்கில்

இலங்கையில் உயிரோடு இருப்பவர்கள் வசிப்பதற்கு வீடு பெறுவதுதான் கஷ்டமாக இருக்கிறது.

ஆனால், ஹொங்கொங்கில் உயிரிழந்தவர்களை ஓய்வில் இடத்துவதற்குக்கூட இடம் கிடைப்பது சிரமம்.

வீடில்லாப் பிரச்சினையை நினைவூட்டி உங்கள் வயிற்றெரிச்சலை வாரிக் கொட்டிக் கொள்ளும் உத்தேசத்தோடு இக்கட்டுரை எழுதப்படவில்லை.

அவசரமாக மாத்திரமன்றி ஆற அமரத் தேடினாலும் தேவைக்கு வீடு கிடைக்காத காலம் இது. நிலைமை இப்போது மேலும் மோசமாகியுள்ளது.

அப்படிப்பட்ட சிரமத்தை அனுபவித்த பலருக்கு "காவல் நீர்" போல் ஆறுதல் தருகின்ற விஷயம்தான் இங்கு கூறப்பட்டுள்ளது.

ஹொங்கொங் அவ்வளவு பெரிய நாடு அல்ல. சிறிய நாடு. 403 சதுர மைல்தான் நிலப்பரப்பு. அமெரிக்காவின் வாஷிங்டன் நகரின் பாதியளவுதான் இருக்கும்.

இந்தச் சின்னஞ் சிறிய நிலப்பரப்பில் ஐம்பது லட்சம் பேர் வாழ்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

இறந்த ஒருவருக்கு அங்கு நிரந்தரமான கல்லறை அமைப்பதைப் போல் சிரமமான காரியம் வேறு இல்லை.

நிரந்தரமான கல்லறை ஒன்றை அமைப்பதற்கு ஆகும் செலவு எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்?

25 ஆயிரம் டாலர்கள். இலங்கை நாணயப்படி சுமார் ஆறு லட்சத்து 25,000 ரூபா. அதாவது 6 அடி நீளம் 2 அடி அகலங் கொண்ட மயான நிலத்தின் விலைதான் இது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கம் புதிய திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டு வந்தது. தற்காலிக புதை குழிகளை அமைக்கும் திட்டந்தான் அது.

தற்காலிக புதை குழிகளில் அடக்கம் செய்யப்படும் சடலங்கள் ஆறு வருடங்களுக்கு அங்கு வைக்கப்படும். பின்னர் சடலங்களை அங்கிருந்து அகற்றி விடுவார்கள். புதிதாக இறப்பவர்களுக்கு புதை குழியில் இடம் அளிக்கப்படும்.

சனத் தொகைப் பெருக்கத்தால் நாளுக்கு நாள் இடநெருக்கடி அதிகரித்து வருகிறது. இதனால் மயானங்களை விஸ்தரிக்க அரசாங்கம் விரும்பவில்லை.

சடலங்களைப் புதைப்பதை விட எரிப்பதையே அரசாங்கம் ஊக்குவிக்கிறது.

புதை குழிகளில் சமயச் சடங்குகளை மேற்கொள்ளும் உறவினர்களைத் திருப்திப்படுத்த அங்கு உயர் மாடிக் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

அந்தக் கட்டடங்களில் 9 அங்குல நீளம், 9 அங்குல அகலம் கொண்ட ஆயிரக்கணக்கான சிறிய அறைகள் உருவாக்கப்படுகின்றன.

இறந்தவரின் அஸ்தியை அங்கு வைத்துப் போகிறார்கள். நினைக்கும் போது சென்று தரிசித்து சடங்குகளை நிறைவேற்றலாம். இறந்தவரின் படத்துடன் பெயரையும் அங்கு பதிக்கலாம்.

இவ்வாறு அமைக்கப்படும் புதைகுழிக்குரிய வருட வாடகை 150 டாலர்களாகும். அதாவது இலங்கை நாணயப்படி 3,750 ரூபா.

இவ்வாறு ஹொங்கொங்கில் புதை குழிகளுக்கு ஏற்பட்டுள்ள மவுசை பக்கத்தில் உள்ள கம்யூனிஸ்ட் சீனா பயன்படுத்திக் கொள்கின்றது.

ஹொங்கொங் நாட்டவரின் சடலத்தை அடக்கம் செய்வதற்கு சுமார் 2 ஆயிரத்து 500 டாலர்களை (6 லட்சத்து 25,000 ரூபா) பெற்றுக் கொள்கிறது.

(ந)

மயானத்தில் கல்லறைகள்

இத்தாலியில் வருமானம் மிக்க தொழில் எது?

இத்தாலியில் இப்போது குறிப்பிட்ட ஒரு தொழில் பெண்கள் மத்தியில் பிரபல்யம் பெற்று வருகிறது.

இந்தத் தொழிலில் ஈடுபட்டால் கைநிறைய சம்பாதிக்க முடிகிறதாம். இதில் கிடைக்கும் வருமானம் வேறு எந்தத் தொழிலிலும் கிடைப்பதில்லையாம். வருடாந்தம் சராசரியாக 15 லட்சம் லீரர்களை இவர்கள் சம்பாதிக்கிறார்களாம்.

என்ன தொழில் என்று கேட்கிறீர்களா? விபசாரத் தொழில் தான் அது.

1960 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் இத்தாலியில் 750 விபசார விடுதிகள் இருந்தன. 1980 இல் அந்தத் தொகை 1000 ஆக அதிகரித்தது.

கிராக்கி மிக்க இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களின் எண்ணிக்கை 20 லட்சத்தை நெருங்கி உள்ளது.

"எஸ்புனிடா வெஜில்லேச்சர்" என்னும் பத்திரிகை இந்தத் தகவல்களை வெளியிட்டது.

20 லட்சம் பெண்கள் இந்தத் தொழில் புரிகிறார்கள் என்றால் அவர்களை நாடிச் செல்லும் ஆண்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருக்கும்?

(ர-7-16)

17 வயது பாட்டி

பதினேழு வயது இளம் குமரிக்கு பேரக் குழந்தை பிறக்க முடியுமா?

ஆம், இப்படி ஒரு சம்பவம் உலகில் நடந்து தான் இருக்கிறது.

ஆப்பிரிக்காவில் கலாபார் நிலைச் சேர்ந்த கறுப்பு இனப் பெண் ஒருத்தியே பதினேழு வயதில் பாட்டியாகியிருக்கிறாள்.

மும்-வி என்ற இந்த முஸ்லிம் பெண்ணுக்கு சிறுவயதிலேயே திருமணம் நடந்தது. அவளது வயது எட்டு வருடம் நான்கு மாதமாக இருந்த போது அவள் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள்.

மும்-வியின் மகள் எட்டு வயதாக இருந்த போது மகவு ஒன்றுக்கு தாயானாள்.

இதனால் மும்-வி பதினேழு வயதில் பாட்டியானாள்.

இதைவிட குறைந்த கால எல்லையில் மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்கள் பிறக்க முடியுமா?

(ர-6)

பெற்றோலுடன் தண்ணீர் கலந்து கார் ஓட்டலாம்

"பெட்ரோலில் தண்ணீரைச் சேர்த்து காருக்குப் பயன்படுத்த முடியும்" என்று ரஷ்ய விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

ரஷ்யாவில் தாஷ்கண்டில் பல மோட்டார் டிப்போக்களில் இந்த சோதனை நடத்தப்பட்டது. அதில் நல்ல வெற்றியும் கிடைத்திருக்கிறது. அதன்படி ஒரு காரின் "டாக்" நிறைய பெட்ரோல் தண்ணீர் கலவையை பிடித்தால் ஏழு லிட்டர் பெட்ரோல் மிச்சம் ஆகிறது.

அத்தோடு வெறும் பெட்ரோலை விட இந்த கலவைப் பெட்ரோலை பயன்படுத்துவதால் கார் நன்றாகவும் வேலை செய்கிறது என்று அந்த விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

பெட்ரோல் - தண்ணீர் கலவை பூரண வெற்றியளித்தால் நம் நாட்டு வாகனங்களில் பிரயாணக் கட்டணம் அதிகரிக்காதல்லவா?

(ர-11)

லீலா: சேலைக்கு ஏற்ற பிளவுஸ். உனக்கு நல்ல பொருத்தம்!
கமலா: சேலைப் பொருத்தம் சரி! வேலைப் பொருத்தம் வராதாமே!
லீலா: கவலைப்படாதே கமலா! இந்த முறை, இந்த உடைக்காகவே உனக்கு உடனே வேலை கிடைக்கும்.
கமலா: கேலி பண்ணாதே லீலா! எத்தனை இன்டர்வியூ? பெயரைக் கூப்பிட்டதும் நடுக்கம்! உன்னை போல சிரிக்கவும் வராது; பேச்சும் ஓடாது!
லீலா: ஓ! அந்தப் பயமா? முன்பு நானும் அப்படித் தான். பிறகு, எஸ். ஆர். பாவிக்கத் தொடங்கினேன். பயமெல்லாம் பறந்தே போய் விட்டது!
கமலா: அது எப்படி?
லீலா: எஸ். ஆர். பற்பசையால் துலக்கிய பல் வரிசை, பளபளக்கும். பயமில்லாமல் எவரோடும் பளிச்சென்று சிரித்துப் பேசிப் பழகலாம்!
இரண்டு கிழமைக்குப் பிறகு:-
லீலா சொன்னது மெத்தச் சரி! எஸ். ஆர். பற்பசை பாவிக்கத் தொடங்கிய பின், என் பற்கள் சுத்தமோ சுத்தம்!
வேலைப் பொருத்தம் வரச் சாலப் பொருத்தம் எது என்று இப்போதல்லவா தெரிகிறது!
விஞ்ஞான முறையில் தயாரித்த எஸ். ஆர். கொண்டு பல் துலக்கினால், பற்களில் மாசு படிவது கட்டுப்படும். பற்கள் வேர் கொள்ளும் முரசு கரைவது குறையும். பற்களை அதி சுத்தமாய் அது துலக்கும்.
பளபளக்கும் தூய பல்வரிசையும் பளிச்சென்ற புன்னகையும் தருவது-எஸ்.ஆர்.
Gibbs S.R. for teeth and gums
LARGE SIZE
SR Gibbs SR
LARGE SIZE
பெரியது ரூ. 7.70
நடுத்தரம் ரூ. 5.40
TAL
ஒரு தரமுயர்ந்த லீவர் உற்பத்தி

இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேன மாவத்தை, கொழும்பு 12. (இலங்கை) தபால் பெட்டி 1613. வெளியிட்ட திகதி 4 செப்டம்பர் 1983.
Chintamani 5, Gunasena Mawata, Colombo 12, P. O. Box 1613;